Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
Jaffna.
T. Phone: 23794

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சுடர் 5: பிரமோதூத ஹூ சித்திரை மீ 16 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 03 (29-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 72

# நான்கு சக்கர வாகனங்கள் அனைத்துக்கும் புலிகளின் சான்றிதழ் வேண்டும்

## யாழ். மாவட்டத்தில் புதிய விதிமுறை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

யாழ். மாவட்டத்திலுள்ள நான்கு சக்கர வாகனங்கள் அனைத்துக்கும் "வாகன அனுமதிச் சான்றிதழ்கள்" வழங்கப்படும்.

இந்த வாகன அனுமதிச் சான்றிதழ்களை விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டணம் எதுவும் செலுத்தாமலேயே இந்தச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வாகன அனுமதிச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட வாகனம் வீதியில் செலுத்தக்கூடிய நிலையில் உள்ளது என்பதை அந்தச் சான்றிதழ் உறுதி செய்யும்.

யாழ். மனோகரா தியேட்டர் சந்திக்கு அண்மையில் உள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் வைத்து இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இங்குவைத்து குறிப்பிட்ட வாகனத்தின் சகல அம்சங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அவ்வாகனத்துக்குரிய சான்றிதழ் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக வாகனங்களைப் பதிவு செய்வதற்குவிண்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 29

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 89 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் 3 பேர் தீவுப்பகுதியிலும் ஏனைய 86 பேர் யாழ் நகரிலும் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இந்த விடுவிப்பு நிகழ்ச்சிக்கு திரு. சி. கா. சிவபாதசுந்தரம் தலைமை வகித்தார். (உ-9)

## விண்ணப்பப் படிவங்கள் நேற்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

வாகன அனுமதிச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் நேற்று முதல் வழங்க ஆரம்பிக்கப்பட்டன.

யாழ். மனோகராச் சந்திக்கு அண்மையில் உள்ள விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் வைத்து இந்த விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன.

வலிகாமம் பகுதி வாகனங்களுக்கு அனுமதிச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பங்களே இங்கு வைத்து வழங்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பங்கள் தொடர்பான முதல் கட்ட வாகனப் பரிசோதனைகள் திங்கட்கிழமை நடைபெற உள்ளதாக அறியவருகிறது. (உ-9)

## வாகன அனுமதி சான்றிதழ் வழங்கல்:

## இலங்கை அரசாங்கத்துக்கு போட்டி நடவடிக்கையல்ல!

### ஸ்டான்லி டொமினிக் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 29

வாகனங்களைச் செலுத்துவதற்கு அனுமதிச் சான்றிதழ் வழங்குவது என்பது இலங்கை அரசுக்குப் போட்டியாக நாம் எடுக்கும் ஒரு நடவடிக்கை அல்ல.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் தெரிவித்தார்.

நமது தமிழ்ப் பகுதிகளில் வீதி ஒழுங்கு நடவடிக்கைகள் மிகவும்பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விபத்துகளும் அதிகரித்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் சீரற்ற வாகனங்களே. தென் பகுதியில்

[5 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப பின்னை... பழைய வண்டியள் எல்லாம் 'ஓரம்' போய் கட்டையில் ஏறும் எண்டு சொல்லுங்கோ...!

## தென்பகுதியின் அனேக கட்சிகள் பேச்சை முழுதாக ஆதரிக்கவில்லை

### வர்த்தக ஊழியர் மத்தியில் டொமினிக்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

தென்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் நாம் அரசுடன் நடத்தும் பேச்சு வார்த்தையை முற்று முழுதாக ஆதரிக்கவில்லை.

மாறாக அந்தக் கட்சிகள் எமக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராக கடுமையான பிரச்சாரங்களையே மேற்கொண்டு



வருகின்றன. இது எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

— இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக்.

நேற்றுப் பிற்பகல் யாழ் மாவட்ட வர்த்தக ஊழியர்கள் சங்கத்தின் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில்அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சங்கரப்பிள்ளை கட்டடத்தில் இந்தக்கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. டொமினிக் மேலும் கூறியதாவது:-

சிங்களப் பேரினவாதம் ஏற்படுத்திய வடுக்கள் இன்னமும் தமிழர்களிடத்திலே ஆழப்

[5ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று மூன்று மணி நேரம் அரசு - புலிகள் பேச்சு!

கொழும்பு, ஏப்ரல் 29

நேற்று நண்பகல் கொழும்பு சென்றிருந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு நேற்றிரவுவடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப். ஏ. ஸி எஸ். ஹமீத் துடன் சுமார் மூன்று மணி நேரம் பேச்சு நடத்தியது.

கொழும்பு சென்றிருக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரே நேற்று அமைச்சர் ஹமீத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினர். (உ)

## அண்ணா காமராஜர் விமான நிலையம்

சென்னை, ஏப் 29

சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு அண்ணாவின் பெயரும் உள்நாட்டு விமான நிலையத்துக்கு காமராஜர் பெயரும் நேற்று சூட்டப்பட்டன.

முதலமைச்சர் கருணாநிதியும் மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் ஆரிப்கானும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். (உ-எ)

## ஏழாலையில் உத்தமன் சிலை திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

கைதடிப் பிரதேச பொறுப்பாளராகவிருந்து வீரமரணமுற்ற லெப்டினன்ட் உத்தமனின் நினைவாக சிலைதிறப்பு விழாவும்—

ஏழாலைமண்ணில் போராடி வீரமரணமுற்ற எட்டுப் போராளிகளின் உருவப்படத் திரைநீக்கமும் இன்று மாலை ஏழாலையில் நடைபெறும்.

பேச்சுக்கள், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ)

## உபவேந்தர் விஜேசேகர வந்தபோது

## சுலோக அட்டைகளுடன் குழுமி நின்ற மாணவர்கள்

கொக்குவில், ஏப். 29

இலங்கை திறந்த பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் தயந்தவிஜேசேகர நேற்று யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த போது கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடங்கள் சில திறந்த பல்கலைக் கழகத்தால் பொறுப்பேற்கப்பட்டதை ஆட்சேபித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அத்துடன் ஆட்சேபனை மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

சுவீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி கட்டடத்தை திருப்பி வழங்கும்படி அவர்கள் இம்மகஜரில் கேட்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக உப வேந்தருடன் விஜயம் செய்த பேராசிரியர் விஜேசேகர

[5 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரஞ்சனின் முன்னிலையில்

## ஜே.வி.பியினரின் ஆயுதங்கள் நேற்று அழித்து நாசம்!

கொழும்பு, ஏப்ரல் 29

தென்பகுதித் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்கப்பட்ட சுமார் 3 ஆயிரத்து 883 ஆயுதங்கள் நேற்று அழிக்கப்பட்டன.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா முன்னிலையில் கொழும்புபொலீஸ் தலைமையக வளவில் வைத்து இவை உருளை இயந்திரத்தால் நெரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

ஒரே தடவையில் அதிக ஆயுதங்கள் அழிக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை பொலீஸார் வைத்துள்

(5ஆம் பக்கம் பார்க்க )

## இந்திய வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்:

## ஈழத் தமிழர் பாதுகாப்பு இலங்கையின் உள் விவகாரம்

### அந்த நாட்டு அரசே பொறுப்பேற்க வேண்டும்

கொழும்பு, ஏப் 29

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியபொறுப்புஇலங்கை அரசைச் சேர்ந்தது. தமிழர்களின்பாதுகாப்புப்பொறுப்பு இலங்கையின் உள்நாட்டு விவகாரம் ஆகும்.

இவ்வாறு கூறினார் இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால்.

இந்தியச் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அப் பேட்டியில் அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

வெளிநாடுகளில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட மாட்டாது.

இன்னொரு நாட்டில் இந்திய இராணுவம் தலையீடு செய்யும் சூழ்நிலை வருங்காலத்திலும் ஏற்பட மாட்டாது.

வெளி நாட்டுக்கு இராணுவத்தை அனுப்பியவர்கள்கூட இன்று மகிழ்ச்சியின்றி இருக்கிறார்கள்.

நடந்து முடிந்தவற்றில் இருந்து இலங்கை அரசும் பாடம்படித்துஇருக்கும்என்று நம்புகிறோம். ஆகவே சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டியவற்றைஇனி மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இலங்கையில் தமிழர்களும் வசிக்கிறார்கள். அவர்களின் நலன்களையும் பாதுகாப்பையும் பார்ப்பது இலங்கை அரசின் பொறுப்பே.

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார். (உ-எ)

### சுபநேரம்

29 -04- 1990

ஞாயிற்றுக்கிழமைசித்திரை 1

சுபநேரம்:

08-58முதல் 10-28 வரை

இராகுகாலம்

04-28 முதல் 05-28வரை

## வல்வை, பருத்தித்துறையில் சாய்ப்புச் சட்டம் அமுல்

வல்வெட்டித்துறை, ஏப். 29


பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப்பகுதிகளில் சாய்ப்புச்சட்டம் அமுல் படுத்தப்பட இருக்கிறது.

பருத்தித்துறையிலுள்ள கடைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஒவ்வொரு ஞாயிறன்றும் மூடப்படும் என்றும்—

வல்வெட்டித்துறையிலுள்ள கடைகள் திங்கட்கிழமைகளில் மூடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பருத்தித்துறைக்கடைகள் அரச ஊழியர்களின் நன்மைகருதி புதன்கிழமை அல்லது வேறொரு கிழமை நாட்களிலேயேமூடப்படவேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-160)

மகத்தான சிங்கர் போட்டியில்...
சிங்கர் குளிரூட்டி ஒன்றை இலவசமாகப் பெறுங்கள்!




விரையுங்கள்!
நீங்களும் சிங்கர் குளிரூட்டி ஒன்றை வாங்கி புதுமையான 'சிங்கர் இலவச குளிரூட்டி' போட்டியில் பங்குபற்றுங்கள்.
மேலதிக விபரங்கள் சிங்கர் வியாபாரிகளிடம்.
சிங்கர்*
மாசற்ற மேன்மை
Licence No. S/734
SLL 4340

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த எவர்சில்வர் பிளேற்றிங் இயந்திரம் (Complete set) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. V. முருகேசு 39/11 மின்சாரநிலைய வீதி, 3 ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (3414)

புதிய வோச் இனின் மெசின் Pearl (பேள், Brand) விற்பனைக்கு உண்டு) ரவிமோகன் டியூசன் சென்ரர். மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (12393)

HONDA CD50 (Gold Line). HONDA CD 90 (Benly) விற்பனைக்கு உண்டு. இன்று (ஞாயிற்றுக்கிழமை) முழு நாளும் பார்வை இடலாம். தொடர்பு K. K. சர்மா, அம்மன் கோவிலடி, கந்தரோடை. (3415)

### காணி விற்பனைக்கு

13 பரப்புக் காணி பலா, மா, தென்னை, பனை, கிணறு, மலசலகூட வசதிகளுடன் கண்டி வீதியில் மீசாலை A. P. C. க்கு முன்பாக உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். T. தாமோதரம்பிள்ளை ஜெயவாசா, உரும்பிராய் கிழக்கு. (3412)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 29-4-90 ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3298)

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Godlen Comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nall-ur Farm Center 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (3216)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(பிலிமத்) கறுப்புவரிச்சேவல் குஞ்சுகள் (Lohmann) பிறவுண் சேவல் குஞ்சுகள் 1. 5. 90 செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க இல 9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3407)

### தேவை

கிறைண்டிங்மில் தூள் அரைக்கும் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. இங்கு தங்கி வேலைசெய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்பு ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும். ஆறுமுகம் அன் சன்ஸ், கண்டி வீதி, ஓமந்தை. (C/ 4336)

சுண்டிக்குளி சைவமகாசபை பாலர் பாடசாலைக்கு பயிற்றப்பட்ட ஆசிரியை ஒருவர் தேவை. க. சத்தியானந்தசிவம், தலைவர், 40, ஈச்சமோட்டை வீதி விலாசத்தில் 28-4-90, 29-4 90 திகதியில் காலை 10 மணி — பி. ப. 5 மணி வரை நேரில் சந்திக்கவும். (12389)

கௌரவமான குடும்பமொன்றுக்கு யாழ் நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றாடலில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாங்குவதற்கு தேவை. தொடர்பு விளம்பர இலக்கம் 124, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (12387)

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை A/L விஞ்ஞானம் படித்தவர்கள் விரும்பத்தக்கது. தகுதியுடையோர் காலை 8.00 மணி முதல் பி. ப 4.00 வரைக்குள் நற்சான்றிதழ்கள் உடன் 01. 05. 90 ற்கு முன் நேரில் வரவும் திறமைக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும் Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி' யாழ்ப்பாணம் (C/4331)

### மணமகள் தேவை

பிரிந்து வாழும் 3 பட்டதாரி உத்தியோகத்தர்கட்கு 30-34 க்குட்பட்ட உயர்குல மணமகள்கள்தேவை. No-685 C/o உதயன். (3416)

### மணமக்கள் தேவை

யாழ்ப்பாணம் இந்து உயர்குல வேளாளப் பெற்றோர் 35 வயது கொழும்பு தனியார் ஸ்தாபனத்தில் கடமையாற்றும் Accountant மகனுக்கும் 37வயது பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கும் மணமக்கள் தேடுகிறார்கள் மகளுக்கு வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். மாற்றுச் சம்பந்தமும் செய்யலாம். முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் இல: 684, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [3370]

### மணப்பெண்கள் தேவை

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சைவவேளாள குடும்பத்தை உடைய 33 வயதுடைய I. C. M. A. எக்கவுண்டனாக கொழும்பில் வேலை செய்பவருக்கும், 38 வயதுடைய M. Sc. கொம்பியூட்டர் என்ஜினியராக அவுஸ்ரேலியாவில் கடமையாற்றுபவருக்கும் B. Sc . I.C.M. A பெண்கள் விரும்பத்தக்கது. சாயிமங்களதிருமணசேவை,. 32, இந்துக்கல்லூரி லேன் யாழ்ப்பாணம். (12382)

### சஞ்சிகைகள் ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், போஸ்ட் இந்தியா குடே, FRONT LINE, SPORT STAR, ஞானபூமி, பொருளியல் நோக்கு மற்றும் எல்லா இந்திய இலங்கை சஞ்சிகைகள் மீண்டும் ஓடர் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, No/165 மின்சாரநிலையவீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பணாம். (C/4343)

### REPAIR

Radio, T.V, Deck மற்றும் மின் உபகரணங்களை நல்ல முறையில் திருத்திக் கொள்ள உடன் நாடவேண்டிய இடம் G. P. Electronics, 317, மேல்மாடி, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/4344)

### கண்டெடுக்கப்பட்டது

கச்சேரி நல்லூர் வீதியில் மோதிரம் ஒன்று 22-04-90 ல் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும் தொடர்பு: P. இராகுலன் 363, நாவலர் வீதி, நல்லூர். [12388]

### தவறிவிட்டது

இ. இரத்தினதுரை என்பவரது பெறுமதி வாய்ந்த ஆவணங்கள் கச்சேரி-நல்லூர் றோட்டில் 27-4-90 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 29, நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12969)

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சிப் பிரிவு

நீர்ப்பாசனப் பொறியியலாளர் கிளிநொச்சிப் பிரிவினால் புனருத்தாரண உதவித்திட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்கள் 07 - 05 - 1990 தொடக்கம் 14 - 05 - 1990 வரை வேலை நாட்களில் காலை 9 00 மணி முதல் மாலை 3.00 மணி வரை பிரதிப் பணிப்பாளர் நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சியில் பெற்று, 1990 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் சமர்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர் கிளிநொச்சிப் பிரிவில் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. என். ஜே. நவரட்ணராஜா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப்பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
இ. 315, கண்டி வீதி,
பரந்தன்,
1990 - 04 - 20 (சி-4478)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

**சிவஞானசுந்தரம் தேவவர்த்தினி**
**(தேவா)**

(சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு)

அன்னையின் மடியில்: 12 - 08 - 1970
ஆண்டவன் அடியில்: 02 - 05 - 1987

திதி: 29 - 04 - 1990

அன்புத் தேவாவே! ஆசை மகளே! பண்பின் திருவுருவே! பாசமுள்ள சோதரியே! ஆண்டு மூன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்! என்றும் நிலைத்து இருப்பாய் எம் நெஞ்சமதில் தேவாவே! எம்பிரான் அருள் வேண்டி நிற்கின்றோம்.

நின் ஆத்ம சாந்திக்காக
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (3358)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகசபை கந்தசாமி**

(மன்னார் மக்கள் வங்கி பிரதம இலிகிதரும் தட்டெழுத்தாளரும்)

தாயின் மடியில் 25. 10. 1934 — சிவனின் அடியில் 29. 04. 1989

நினைவு நாள் திதி:- 18. 05. 1990

எங்கள் இதயக்கோவிலில் வீற்றிருக்கும்
அன்புத் தெய்வமாகிய அப்பாவுக்கு எங்கள்
நினைவு மலர்களும் அஞ்சலிகளும்

தகவல்:-
க. கலையரசன்,
சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.
(3380)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி. தம்பு சின்னம்மா**
அவர்கள்

தோற்றம்: 05 - 07 - 1911 — மறைவு: 10 - 05 - 1989


திதி:- 30 - 04 - 1990

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே தாங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு காலமானாலும் உங்கள் பசுமையான நினைவுகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சங்கத்தாகேணி,
3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (3376)

## மூன்றாம் வருட நினைவஞ்சலி



அமரர்

**அண்ணாமலை சந்திரசேகரம்**
அவர்கள்

(பிரகாஸ் அரிசி ஆலை உரிமையாளர், பிரகாஸ் ரான்ஸ்போட் பங்காளர்)

மலர்வு: 30 - 05 - 1942 — உதிர்வு: 29 - 4 - 1987

உலகுக்கு உத்தமராய், ஊர்கண்ட நல்லவராய். எமக்கெல்லாம் இனியவராய் வாழ்ந்து, எங்கள் வாழ்வும் ஏனையோர் வாழ்வும் வளம்பெறச் செய்தீர்கள். இதனைக் கண்டு சகிக்காத விதி சதி செய்து எம்மிடமிருந்து உங்களைப் பிரித்துவிட்டது. நீங்கள் பிரிந்து மூன்று வருடங்களானாலும் எல்லோர் உள்ளங்களிலும் தெய்வமாகப் பூசிக்கப்படுகின்றீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள், தந்தையார்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிமார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு.



அமரர்

**அருளம்பலம் சுப்பிரமணியம்**
அவர்கள்

(நிதான ஸ்ரோர் உரிமையாளர்)

மண்ணுலகு: 17 - 02 - 1924 — விண்ணுலகு: 29 - 04 - 1987

எமக்கல்ல எல்லோர்க்கும் எந்தையாக வாழ்ந்தீர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து நாம் நல்வாழ்வு வாழ வழி காட்டினீர்கள். ஐயப்பனை அல்லும் பகலும் பூசித்து அவன் அருள் பெற்றீர்கள். நீங்கள் பிரிந்து மூன்று வருடங்களானாலும் உங்கள் நினைவு பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது எம் மனதில். உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு நிறைந்த
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

(12396)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து

**பொருள்:**

குறைந்த இடமெல்லாம் படிப்படியாக நிறைந்து விளங்குகின்ற திங்களிடம் உள்ளதுபோல், இந்த மாதர் முகத்தில் களங்கம் உண்டோ? இல்லையே!

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
29 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

# நேரான அளவுகோல் வேண்டும்

ஆசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் சேவை மனப்பான்மை, திறமை என்பவற்றைப் பாராட்டிக் கௌரவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமுதாயத்துக்குப் பயன் தரும் முறையில், சேவை உள்ளத்துடனும், ஆர்வத்துடனும், திறமையுடனும் பணிபுரியும் ஆசிரியர்களையும், கல்விப் பகுதி அதிகாரிகளையும் பாராட்டுவதுடன் நின்றுவிடாது. அவர்களுக்கு விசேட சம்பள உயர்வுகளும் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயற்படுத்தப் போவதாக வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கல்வித் துறைச் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா தெரிவித்திருக்கிறார்.

ஆசிரியர்களின் பணி மகத்தானது. இன்றைய மாணவர்களை, இளைஞர்களை, நாளைய நற்பிரசைகளாக, வருங்காலத் தலைவர்களாக உருவாக்கிவிடும் சிற்பிகள் அவர்களே. சென்ற இடமெல்லாம் சிறப்புத் தரும், மனித வாழ்க்கையில் செல்வங்களுள் அருஞ்செல்வமாக மிளிரும் அறிவை, கல்வியைப் புகட்டும் ஆசான்கள், குருமார்கள் அவர்களே.

அவர்கள் ஏனைய தொழில் செய்பவர்களைப் போல, ஊதியத்துக்காக மட்டும் உழைப்பவர்களாக இருக்க முடியாது. ஏனைய ஊழியர்கள், அதிகாரிகளைப் போல மக்களுக்குச் சேவை செய்வது என்ற ஓர் எல்லைக் கோட்டுக்குள் மட்டும் நின்று விடவும் முடியாது. ஒரு சந்ததியினர் என்றில்லாமல், தமது சேவைக் காலத்தில் இரண்டு மூன்று சந்ததிகளைக் கூட பயனுள்ள பிரசைகளாக அறிவூட்டி வளர்த்து விடும் பெரும் பணியைச் செய்பவர்கள் ஆசிரியர்கள்.

திண்ணைப்பள்ளி, குரு-சிஷ்ய கல்வி முறைகள் இருந்த பண்டைய காலத்தில் ஆசிரியர்கள் தெய்வத்துக்குச் சமமாக மதிக்கப்பட்டார்கள். அறிவுச் செல்வத்தை ஊட்டுபவர்கள் என்பதால் ஆசான்களுக்கு சமூகத்திலும் மிக மதிப்பான அந்தஸ்தும், கௌரவமும் வழங்கப்பட்டன.

அதே போல, ஆசிரியர்களும் துறைதோயக் கற்றவர்களாகவும், ஞானம் தவம் சிறந்தவர்களாகவும், நற்குணவான்களாகவும், மாணாக்கருக்கு நல்லுதாரண புருஷர்களாகவும் விளங்கினர். மாணவர்கள் அவர்களிடமிருந்து நல்ல குணங்களையும், பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் பயின்று வீட்டுக்கும், நாட்டுக்கும் பயன்படும், பெருமை தேடித்தரும் பிரசைகளாக உருவெடுக்கக் கூடியதாக இருந்தது; வளரக்கூடியதாக இருந்தது.

ஆனால் இப்போது நிலைமை முற்றாக மாறிவிட்டது. ஆசிரியர்களில் மிகப்பெரும்பாலானோர் தமது பொறுப்பையும், மகிமையையும் உணர்ந்து நடப்பவர்களாக இல்லை. அதன் பெறுபேறாக அவர்களுக்கு சமூகத்தில் உரிய மதிப்பும், கௌரவமும், அந்தஸ்தும் கீழிறங்கி விட்டன.

எவர் ஒருவரும் தமது பதவியின் அல்லது தொழிலின் பொறுப்பை, பணிகளை, மதிப்பை நிலைநாட்டிப் பூரணமாகக் கடமையாற்றுவதற்கு, அவரது உள்ளார்ந்த உணர்வுபூர்வமான விருப்பம் தேவை. அது இல்லையேல் எதைச் சொல்லியும், எதனைச் செய்தும் அவரை அந்தப் பணியில் பூரணமாக ஈடுபடுத்த முடியாது. ஆனால் சில ஊக்குவிப்புகள், கௌரவங்கள் அவரைத் தனது பணியைத் திறம்படச் செய்வதற்கு ஆரம்ப உந்து சக்தியாக அமையும் என்பது உண்மையே.

அந்த வகையில் உண்மையான சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களைக் கௌரவித்தல், விசேட சம்பள உயர்வு வழங்குதல் என்பன ஆசிரியர்கள் மத்தியில் ஒரு புதிய தூண்டுதலை விருப்பத்தை வளர்க்க உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால் கௌரவமும், ஊக்குவிப்பும் உண்மையான சேவைப்பற்றுடன், உளம் விரும்பி, தம்மை அர்ப்பணித்து உழைப்பவர்களுக்கே கிடைக்க வேண்டும். உயர் அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் திருப்திப்படுத்தும், அல்லது அவர்களுக்குக் காவடி தூக்கும் ஒரு சிலருக்கு வழங்கப்பட்டு விட்டாலும் கூட உத்தேச திட்டம் வெறும் கேலிக்கூத்தாக அமைந்துவிடும்.

எனவே இவ்விடயத்தில் சரியானதும், அரசியல், தனிமனித, பந்த பாசச் செல்வாக்குகளுக்கு வளையாத நேரானதுமான அளவுகோல் அவசியம் ஆகவே இது சம்பந்தமாக, முழு அளவிலான எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று முன்னெச்சரிக்கை செய்கிறோம்.

### உதவி அரச அதிபர் பிரிவுவாரியாக

# மூலவளங்கள் பற்றிய தகவல் சேகரிக்க அரசாங்கம் முடிவு

கொழும்பு, ஏப்ரல் 29

நாட்டில் உள்ள மூலவளங்கள் பற்றிய தகவல்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவுவாரியாக சேகரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் மீது கொள்கை வகுத்தல், திட்டமிடல் அமைச்சு இந்தப்பணியில் ஈடுபட்டுள்ளது.

நாட்டில் உள்ள 279 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அந்தந்தப்பிரிவுகளில் உள்ள அரசு ஊழியர்கள் மூலவளங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடுவர்.

மூன்று மொழிகளிலும் இந்த அறிக்கை அடுத்த ஆறு மாதங்களில் வெளியிடப்படும் என்று திட்டமிடல் துணை அமைச்சரும் சுற்றாடல் பாதுகாப்பு இட்ட. அமைச்சருமான டாக்டர் விமல் விக்கிரமசிங்கா நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(ப-எ)

# வீடுகட்டத் தேவையான மரம் சலுகை விலையில்

## மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஏப் 29

வீடு கட்டுவதற்குத் தேவையான மரங்களை சலுகை விலையில் வடபகுதியில் வழங்க மரக்கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் நன்கொடை மூலம் வீடுகட்டுவோருக்கே இந்த சலுகை வழங்கப்படும். வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக கிடைத்த மரங்களையே இவ்வாறு சலுகை விலையில் விற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீடுகட்டுவோர் அந்தந்த பகுதி உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் சென்று மரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை முதல் கட்டமாக யாழ். மரக்கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அடுத்த கட்டமாக வடமராட்சியில் இது அமுல் செய்யப்படும். (இ-9)

### தெல்லிப்பழை

## இந்து இளைஞர் சங்க வெள்ளி விழா

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வெள்ளி விழா நேற்று 28ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று 29 ஆம் திகதி சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் தலைமையில் நடைபெறும். வெள்ளிவிழா ஞாபகார்த்த மண்டபத்தை வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் திறந்துவைப்பார். கலைநிகழ்ச்சிகளுக்கும் இடம் பெறும்.

30 ஆம் திகதி 3 ஆம் நாள் நிகழ்ச்சிகள் இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு ந. சிவபாலகணேசன் தலைமையில் நடைபெறும். யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு ச. பொன்னம்பலம் பிரதமஅதிதியாக கலந்து உரையாற்றுவார்.

பரிசில் வழங்கல் கலை நிகழ்ச்சிகள் நாடகம் ஆகியனவும் அன்று இடம்பெறும். (இ-68)

## குமுலுஸ் வாடிக்கையாளருக்கு பல்வேறு பரிசுத்திட்டங்கள்

யாழ்ப்பாணம் ஏப் 29

பின்லே கெமிக்கல்ஸ் அன்ட் டைய்ஸ் என்ற நிறுவனம் அதன் குமுலுஸ் வாடிக்கையாளர்களுக்கென பரிசுத் திட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இத் திட்டத்தில் பங்கேற்போர் பரிசுப் பொருளாக நப்சாக் தெளிகருவி, ஸ்போர்ட்ஸ் சைக்கிள், கைத்தெளிக்கருவி, சிறிய வானொலிப் பெட்டி, எவரெடி ரோச்லைட் ரீஷேர்ட் என்பவற்றைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மிளகாய்ச் செய்கையின் போது பி. ஏ. எஸ். எவ். குமுலுஸ்டி.எவ். (BASF Kumulus D.F.) என்ற களை கொல்லி மருந்தைப் பாவித்து வந்தால் அதிக விளைச்சலைப் பெறலாம் என இதனை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வரும் இந்நிறுவனத்தின் இரசாயனப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (இ-ப)

## ஈச்சங்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

வவுனியா ஏப் 29

3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் வவுனியா ஈச்சங்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை வைபவரீதியாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. இளங்கோ அண்மையில் நட்டார்.

குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த சுகாதார நிலையத்தின் மூலம் இப்பகுதி கிராமவாசிகளின் அடிப்படை சுகாதார தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-164)

## வவுனியாவில் 10ஆம் திகதி சமாதான ஊர்வலம்

வவுனியா, ஏப்ரல் 29

வவுனியாமாவட்டத்திலுள்ள சகல இனத்தவர்களிடையேயும் சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் பேணும் நோக்கத்துடன் சமாதான ஊர்வலம் ஒன்று எதிர்வரும் மே 10 ஆம் திகதி நடைபெறஉள்ளது.

இதற்கென கேணல் பராமிகுலதுங்க தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் நாலாதிசைகளில் இருந்தும் வவுனியாவை வந்தடையும் மக்கள் ஒன்று திரண்டு பெரும் ஊர்வலமாக நகர வீதிகளில் செல்வார்கள்.

இவ்வூர்வலத்தில் இனங்களின் பாரம் பரிய கலை கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளும், இடம்பெறும்.

ஊர்வலத்தின் முடிவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சமாதான செய்திகள் வாசிக்கப்படுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (இ-164)

### எழுதுவினைஞர் பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை, ஏப் 29

அரச எழுது வினைஞர் சங்கத்தின் 29 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் மே மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனச்சங்கப்பொதுச் செயலாளர் திரு. பரராஜசிங்கம் தெரிவித்தார். (ப-30)

## கண்டதும் கேட்டதும்

இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் சீனாவை ஜப்பான் ஆக்கிரமித்தபோது சீனாவில் ஏராளமான நாய்கள் கொல்லப்பட்டன. நாய்களைக் கொன்றவர்கள் ஜப்பானியர் அல்லர் சீனர்களே!

நாய்கள் குரைத்து எதிரிகளிடம் தம்மைக் காட்டிக் கொடுத்து விடும் என்ற அச்சமே சீனர்கள் செல்லமாக வளர்த்த தமது நாய்களைக் கொல்லக் காரணமாக இருந்தது. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்து தற்போது 45 வருடங்கள் கழிந்து விட்டன.

ஆனால் சீனாவில் நாய்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

இப்போது நாய்களுக்கு ஆபத்தாக வந்தது ஜப்பானியர்கள் அல்லர். சீனாவின் தொய்ந்து போன பொருளாதாரமே!

### யானைகள் அட்டகாசம்

மாங்குளம் ஏப் 29

வடகாடு பகுதியில் யானைக் கூட்டங்கள் வீடுகள், தென்னை மரங்கள், வாழைகளை நாசமாக்குகின்றன. அத்துடன் வீடுகளுக்குள் புகுந்து நெல் சிறு தானியங்களையும் அவை தின்று சேதப்படுத்துகின்றன. (இ-94)

## பாலப்பாணி, வவுனிக்குளத்தில் புதிதாக இரு பாடசாலைகள்

மாங்குளம் ஏப் 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் இரு பாடசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பாடசாலைகள் பாலப்பாணி, வவுனிக்குளம் 6ஆம் கட்டை ஆகிய கிராமங்களில் அமையும்.

இக்கிராமமக்களின் தேவைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எஸ்.எஸ். மனோகரன் பாடசாலைகள் அமைவதன் அவசியத்தை கல்விச் செயலாளருக்குத் தெரியப்படுத்தி இருந்தார். இதனை அடுத்தே இவற்றை ஆரம்பிக்க உறுதி அளிக்கப்பட்டுள்ளது. (இ-94)

### மீனுக்கு கிராக்கி

மாங்குளம் ஏப் 29

மாங்குளத்தில் மீனுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதோடு இறைச்சிக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது (இ-94)

## உ.அ.அதிபர் பிரிவுகள் தோறும் வீடமைப்பு ஐக்கியநாணயசங்கம்

கிளிநொச்சி ஏப் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடமைப்பு ஐக்கிய நாணயச் சங்கங்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் திரு. க. சின்னராசா மேற்கொண்டுள்ளார்.

முதலாவது சங்கம் விரைவில் பூநகரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது

இதில் வீடு தேவையானவர்கள் உறுப்பினர்களாக சேரலாம். இதன் மூலம் கட்டடப் பொருள், பணம், வீடு கட்ட காணி போன்றவற்றைப் பெற்று கொள்ளலாம்.

சங்கம் கட்டடப் பொருள் உற்பத்தியிலும் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-76)

## கிளிநொச்சி பஸ் நிலையத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி. ஏப் 29

கிளிநொச்சி பஸ் நிலையத்தை புனரமைப்புச்செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பஸ் நிலையதில் புதிதாக மூன்று தரிப்பிடங்களும் மலசலகூடமும் அமைக்கப்பட உள்ளன.

இதற்கான நிதியை வழங்க விரும்பும் மக்கள், பொது ஸ்தாபனங்கள் கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் கோபியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். [இ-76]

### செல்லப்பாவின் எழுச்சி கீதங்கள்

தேனிசை செல்லப்பா குழுவினரின் எழுச்சி கீதங்கள் 2 ஆம் திகதி நெடுங்கேணியிலும் 3 ஆம் திகதி முல்லைத்தீவிலும் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமை உறுப்பினர்களும் உரையாற்ற உள்ளனர். (இ-126)

### உள்ளூராட்சி ஊழியர்கள்

## கடன்களைப் பெறுவதில் சிரமம்

புதுக்குடியிருப்பு ஏப் 29

அண்மையில் சில சலுகைக் கடன்களை வழங்கும் சுற்றறிக்கைகள் அரசினால் அனுப்பப் பட்டபோதிலும் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிச்சபை ஊழியர்கள் பலர் இதனைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி உள்ளனர் என்று கூறப்படுகிறது.

அந்தந்த சபை அல்லது கூட்டுத்தாபன நிதியில் சம்பந்தப்பட்ட கடன்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நியதி இருப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. [இ 126]

### வல்வையில் வாகனம் தடம்புரண்டது

தற்சமயம் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வல்லைப் பாலத்தில் ரிப்பர் லெறி தடம்புரண்டதால் அப்பகுதியூடாக போக்குவரத்துக்கள் மூன்று மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்தது.

வெள்ளி அதிகாலை மூன்று மணிக்கு நடைபெற்ற இந்த விபத்தால இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### குண்டுகள்!

கொழும்பு, ஏப் 29

பாணந்துறை ரயில நிலைய வளவில் மூன்று குண்டுகள் சடந்த புதன் கிழமை கண்டு பிடிக்கப்பட்டன. பார்சல் ஒன்றில் இக் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

### சிரித்துப் பேசும் இடமா அது?

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு 20 4.90 காலை 8.00 மணிக்கு மூளை நரம்பு சம்பந்தமான கிளினிக்குக்கு எனது தாயாரை அழைத்துச் சென்றிருந்தேன். டாக்டர்கள், தாதிகள், மற்றும் ஊழியர்கள் சுறுசுறுப்பாகவும், கரிசனையோடும் நடந்து கொண்டார்கள்.

மருந்து கொடுக்கும் 'கவுண்டருக்கு' 10 மணியளவில் வந்தேன். எல்லா கவுண்டரிலும் நீண்ட வரிசைகள். 5 ஆம் இலக்க கவுண்டரில் ஆட்கள் அதிகம் இல்லை. ஆனால் அங்கு மருந்து கொடுக்கும் பெண்மணி எனது துண்டைப் பார்த்து விட்டு இம் மருந்துகள் தன்னிடம் இல்லை. அடுத்த கவுண்டருக்கு போகும்படி கேட்டாள். அடுத்த வரிசைக்கு சென்றேன் வரிசை நகருவதாக இல்லை. ஆமை வேகம். எல்லா வரிசைகளும் ஸ்தம்பித்திருப்பது போன்ற நிலை.

ஆட்கள் பற்றாக்குறைகாரணமாக இத் தாமதம் இருக்கலாம் என கணக்குப் போட்டேன் வரிசையில் என்னுடன் நின்றவர்கள் காலையில் சாப்பிடாமல் வந்தது; 7 மணிக்கே வந்தது; மயக்கமாய் இருக்குது; என்று தம் அங்கலாய்ப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

11.10க்கு எப்படியோ கவுண்டருக்கு அண்மையில் சென்றதும் உள்ளே பார்த்தேன். எல்லா கவுண்டரிலும் மருந்து கொடுக்கும் பெண்கள் இருந்தார்கள். ஆனால் யாருமே நீண்டவரிசை தங்களைசார்ந்திருக்கிறதே என்ற உணர்வே இல்லாமல் காலதாமதமாக சிரித்துப்பேசி மகிழ்ந்த படி இருந்தார்கள். போதாக்குறைக்கு அவர்களுடன் பேச்சுக் கொடுக்கவென்றே சில தோழிகளும் அவர்களுடன் உட்கார்ந்திருந்தார்கள். வேலை நேரத்தின் போது யாரும் சிரித்துப்பேசி மகிழ்வதை ஒருவரும் குறைகூற முடியாது தான். ஆனாலும் இத்தனை ஜீவன்களும் தமது அசிரத்தையால்துன்புறுவதை அவர்கள் நினைத்துப் பார்க்கக்கூடாதா?

கே. சோமகாந்தன்,
கந்தரோடை,
சுன்னாகம்.

### வங்கிப்பிணையாளிகள்

நிவாரண வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு வங்கிகள் கோரும் பிணைகள் கடுமையானவையாக இருக்கின்றன.

பிணையாளிகள் 35வயதுக்கு உட்பட்டவர்களாகவும் மாதம் 3,000 ரூபா வரையில் வேதனம் பெறும் அரச ஊழியர்களாகவும் இருக்க வேண்டும் என வங்கிகள் கோருகின்றன.

எம் மத்தியில் இத்தகைய அரச ஊழியர்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றனர் ஆகவே, பிணையாளிகளைக் கண்டு பிடிக்க முடியாமல் பொதுமக்கள் திகைக்கின்றனர்.

இதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய முடியாதா?

கு. சி. சுந்தரம்பிள்ளை,
உரும்பிராய்.

## ★ செய்திக் கொத்து ★

### விண்ணப்பிக்கலாம்

பருத்தித்துறை ஏப் 29

வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் கல்விப் பணிமனையின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரில் விருப்பமானவர்கள் ஆறு மாத கால சம்பள முற்பணக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் என வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தெரிவித்துள்ளார். (இ-118)

### துவக்கு வெடித்தது

பச்சிலைப்பள்ளி, ஏப் 29

வேட்டைக்கு கொண்டு செல்ல வைத்திருந்த துவக்கு கீழே விழுந்து வெடித்ததால் முற்றத்தில விளையாடிக் கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுவன் துடிதுடித்து மரணமானார். இச்சம்பவம் முகமாலை பொந்தர் குடியிருப்பு என்னும் இடத்தில இடம்பெற்றது.

துரைராசா பிறேம்தாஸ் என்னும் சிறுவனே இறந்தவர் ஆவார். (இ-117)

### மாவட்ட கவர்னர்

சாவகச்சேரி, ஏப் 29

உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் மாவட்டக் கவர்னர் திரு. பிரேமச்சந்திரா பத்திரனாவுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மே முதலாம் திகதி வரவேற்பளித்துக் கௌரவிக்கும். (இ-31)

### நெடுந்தீவு பிரதான வீதியின் அவல நிலை

நெடுந்தீவு, ஏப் 29

நெடுந்தீவின் பிரதான வீதி படுமோசமான நிலையில் காணப்படுகிறது

சுமார் ஐந்து மைல் நீளமான இந்த வீதியைத்திருத்த நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் வடக்கு கிழக்கு மாகாண அரசின் பிரதம செயலாளரிடம் கேட்டுள்ளது. (இ-111)

### முல்லைக் கலைஞர்

புதுக்குடியிருப்பு, ஏப் 29

கடந்த 25ஆம்திகதி முல்லைத்தீவு முற்றவெளியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில முல்லைத்தீவுக் கலைஞர்களும் பெருமளவில் பங்குபற்றினர். முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இசை நிகழ்சிக்காக கொழும்பில் இருந்து 'சித்தாரா' இசைக்குழுவினர் வரவழைக்கப்பட்டிருந்தனர். (இ-126)

### வாசகர் வட்டம்

சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உப பணிமனை பொதுநூலகத்தில் வாசகர் வட்ட வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு மாலை 3 00 மணிக்கு நடைபெறும்.

நாவற்குழி உபபணிமனை. பொறுப்பதிகாரி திரு. ஏ கே. தில்லை நடராஜா கூட்டத்திற்கு தலைமை வகிப்பார். (இ-69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

சுன்னாகம் லயன்ஸ் கழக 27-4-90 ஆம் திகதிய அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 27-5-90 ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

காரியதரிசி
லயன்ஸ் கழகம்
சுன்னாகம்.

(C/4350)



## தட்டெழுத்தாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நன்கு அனுபவமுடைய தட்டெழுத்தாளர் (Typists) தேவை. 45 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் கல்வி, நற்சாட்சிப் பத்திர மூலப் பிரதிகளுடன் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
அருண் மார்கட்டிங் அன்ட் அட்வட்டைசிங்,
15, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி-4339]



## உத்தியோகத்தர்கள் தேவை

1. அலுவலகச்செயலாளர் [Office Secretary]
தகமை: அலுவலக நிர்வாகத்தில் அனுபவமுள்ள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள்.
சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்.

2. ஆராய்ச்சிஉதவியாளர்கள் [ResearchAssistants]
தகமை: விஞ்ஞான, கலைப்பட்டதாரிகள் அல்லது புனர்வாழ்வு அபிவிருத்திப்பணிகளில் அனுபவமுள்ளவர்கள்.
★ குறிப்பிட்ட திட்டங்களை தயாரிப்பதற்கேற்ற நிதி ஒதுக்கித் தரப்படும்.

3. தட்டெழுத்தாளர் [Typist]
தகமை: ஆங்கிலம், தமிழ் தட்டச்சு வேலைகளில் தேர்ச்சி பெற்ற ஆண்கள்.
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

சகல விபரங்களும் அடங்கிய விண்ணப்பங்கள் கீழே உள்ள முகவரிக்கு 10-05-90 க்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

புனர்வாழ்வுப்பிரிவு
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

207, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (12399)


கடதாசிக் கூழிலிருந்து
# சிலை-பொம்மை தயாரிக்க கடன்

யாழ்ப்பாணம் ஏப் 29

கடதாசிக் கூழில் இருந்து சிலைகள், பொம்மைகள் தயாரிக்கும் தொழிலுக்கு வடக்கில் ஊக்கம் அளிக்கப்படவுள்ளது.

இத்தொழிலுக்கு இலங்கை வங்கி மானிப்பாய் கிளை கடன் வழங்கி இருக்கிறது.

சுய தொழில் வாய்ப்புக்காக வழங்கப்படும் கடன் திட்டத்தின் கீழ் இக்கடன் வழங்கப்பட்டது.

இந்தக் கடன் வழங்கல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வைபவத்தில் பிரதேச முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி, கிளை முகாமையாளர் திரு. சி. நவரத்தினராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்தில் பொம்மை தயாரிக்கும் தொழிலுக்கும், லேத் மெசின் தொழிலுக்கும் கடன் வழங்கப்பட்டன.

வங்கியின் சமூகக் கடன் வழங்குநர்கள் தம் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கும் நடைமுறையும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (இ-3)

## மென்பந்து சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, ஏப்ரல் 29

அமரத்துவ வேங்கைகள் நினைவாகபுலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய 25 ஓவர் மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் தம்பசிட்டி உதயதாரகை அணி பாரதிதாசன் அணியைத்தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை அணி தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து 64 ஓட்டங்களைப்பெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாரதிதாசன் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 54 ஓட்டங்களை மட்டும்பெற்றது. (க-118)

# விளையாட்டுப் போட்டி முடிவுகள்

கல்வியங்காடு ஏப் 29

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுவிழா கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திரு. க. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் திரு. க. ஏகாம்பரம் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாண உடற்கல்வி கல்வி அதிகாரி திரு. சு. அருணகிரிராஜா, கல்வியங்காடு கிராமசேவகர் திரு. எஸ். ஜே. செல்லத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

சிதம்பரப்பிள்ளை இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

பின்வருவோர் வெற்றி வீரர்கள், வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

8 வயதுக்குக் கீழ் எஸ். பிரசன்னா, பா. பிரேமினா. 10 வயதுக்குக் கீழ் எஸ். சுரேஸ்குமார், ப. அனித்தா. 12 வயதுக்குக் கீழ்: எஸ். மனோகரன், தி சுகன்யா. 14 வயதுக்குக் கீழ்: ப. பத்மஜோதி, த. அனுஷியா. 16 வயதுக்குக் கீழ்: பா. ரமணன், சு தனலெட்சுமி. 18 வயதுக்குக் கீழ்: இ. ரகுநாதன், பா. சத்தியதீபா. 18 வயதுக்கு மேல்: வி. ஞானராஜ், த. யோகராஜா, ச. தர்மகுணவேதி.

பரிசளிப்பு வைபவத்துடன் விளையாட்டுத்தலைவர் திரு. இ. இராஜேஸ்வரனின் நன்றியுரையுடன் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன. (க)

அரியாலை மத்தி செயின்ஸ் போட்டி
# வெற்றிதோல்வி இல்லை

யாழ்ப்பாணம், ஏப் 29

அரியாலை மத்திய விளையாட்டுக்கழகத்திற்கும்யாழ்ப்பாணம் செயின்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நேண்மையில் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் ஆடிய அரியாலை அணியினர் 169 ஓட்டங்களைப் பெற்றனர். அகிலன்75, றொமேஸ் 26, வர்னேந்திரா 17 ஓட்டங்களைப் பெற்றனர் ஞானசேசரன் 5 விக்கெட்டுகளையும், சிறீதரன், அருணோதயன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

செயின்ஸ் அணி தனதுமுதல் இன்னிங்சில் 69 ஓட்டங்களைப் பெற்றது. உதயன் 14, முகுந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். குகனேந்திரா 6 விக்கெட்டுக்களையும், அகிலன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடப் பணிக்கப்பட்ட செயின்ஸ் அணியினர் 6 விக்கெட் இழப்பிற்கு 118 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. சிறீதரன் ஆட்டமிழக்காமல் 43 ஏகுலன் ஆட்டமிழக்காமல் 28, முகுந்தன்12 ஓட்டங்களைப் பெற்றனர். குகனேந்திரா, வர்னேந்திரா இருவரும் தலா 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். [க-மு]

## விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி ஏப் 29

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

மட்டுவில் சந்திர புரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். இவ் விளையாட்டுப் போட்டிக்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமை வகிப்பார். (31)

# எதையும், எந்நேரமும் சந்திக்க நாம் தயாராக இருக்கின்றோம்

## கைதடிப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம் ஏப் 29

''நாம் இன்னும் எமது குறிக்கோளிலிருந்து விலகவில்லை. எதையும் என்நேரமும் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம்.''

கைதடி கிழக்கு சனசமூக நிலைய விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கைதடி பிரதேசப் பொறுப்பாளர் திரு. அப்பன் இவ்வாறு கூறினார்.

திரு. ஆ. கந்தையா, திரு. மா. சிவபாதம், திரு. ந. குமரகுருபரன், திரு. கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

வெற்றி பெற்ற இல்லத்துக்கான கேடயத்தை திரு. அப்பன் வழங்கினார்.

சனசமூக நிலையச் செயலாளர் திரு. எஸ். சிவநேசன் நன்றியை வழங்கினார். (இ-7)


அனுபவம் உள்ள TECHNICIAN / பெண்
## நெசவாளர்கள் தேவை

கீழ்க் குறிப்பிட்டுள்ள மின்தறி ஆலைகளில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள ரெக்னிசன்களும்/ பெண் நெசவாளர்களும் தேவை.

● மே மாதம் 10ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

சிங்கம் மாஸ்டர்

R. G. SYNTHETIC
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

SRIRAM'S
இருபாலை,
கோப்பாய்.

RAJHBRO'S
மயிலங்கூடல்,
இளவாலை.

[சி-4479]



## தேவை

உடைந்த வெள்ளைப் போத்தல் துண்டுகள் தேவை. கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா வீதம் கொடுக்கப்படும்.

மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை
த பெனின்சுலா குறுப்,
163, கண்டி வீதி, அரியாலை
யாழ்ப்பாணம்.

(சி-4347)


## மக்கள் முகம்

### புதிய நிர்வாகிகள்

யாழ்ம்பாண, ஏப் 29

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட ஸ்ரீ மன்றுலாகும் விநாயகமூர்த்திப் பிள்ளையார்தேவஸ்தான மகாசபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர் விவரம் பின்வருமாறு

தலைவர் திரு. பொ. சண்முகநாதன் துணைத்தலைவர்கள். திரு. மு. கனகசபை' திரு. ச. நாகேஸ்வரன். செயலாளர். திரு. க.வி. சரவணமுத்து. துணைச்செயலாளர்: திரு. பொ. சிவப்பிரகாசம். பொருளாளர்: திரு. ச. திருநாவுக்கரசு.

செயற்குழு உறுப்பினர்கள். திருவாளர்கள். பொ. சிவலோகநாதன், க நகுலேஸ்வரன், சு.பொ. நல்லைநாதன், இ. பரராசசிங்கம், கு. நடராஜா செ. கந்தசாமி, ச. முருகையா, யோ. சிவகுமார், சி தேவகுமார்.

### புதிய சங்கம்


பண்டத்தரிப்பு ஏப் 29

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்விப் பிரதேச கல்விச் சேவை அலுவலர்களது நலன் கருதி வடக்கு-கிழக்கு மாகாண சபைப் பிரதேச கல்வி அதிகாரிகள் சங்கம் என்ற அமைப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

தலைவர்: திரு. சி. தியாகராசா (யாழ் கோட்டம்) உப தலைவர்: திரு. ஆர். கே. குலசேகரம் (மருதனாமடம் கோட்டம்), இணைச் செயலாளர்கள்: திரு. எஸ். கணேசபிள்ளை, ஜனாப் எஸ். ரஹீம், பொருளாளர்: திரு. இ. சிவானந்தம் (பண்டரித்தரிப்பு கோட்டம்). இவர்களுடன் மேலும் அறுவர் சபையின் உறுப்பினராகத் தெரிவாகினர். (ப-120)


# ஆசார்யாபிஷேக அழைப்பிதழ் ★ 3ஆவது பிறந்ததின வாழ்த்து





சோமசுந்தரக்குருக்கள் பாலச்சந்திரசர்மா

பிரமோதூத வருடம் சித்திரை மாதம் 16ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை (29-04-90) காலை 6 மணிமுதல் 7 மணிக்குள் வரும் சுப வேளையில்

சோமசுந்தரக்குருக்கள் பாலச்சந்திரசர்மா ஆகிய எனக்கு புளியங்கூடல் மகாமாரி அம்பாள் தேவஸ்த்தான மண்டபத்தில் (குரு சிஷ்ய உபதேசம்) நடைபெற இருப்பதால் அத்தருணம் யாவரும் வந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மு. குறிப்பு: 30-04-90 சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.



பா. லோகாத்மன்

புளியங்கூடலைச் சேர்ந்த பாலச்சந்திரசர்மா காஞ்சனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் லோகாத்மன் தனது மூன்றாவது பிறந்த நாளை தனது தாத்தா வீட்டில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, கனடா மாமா, சிங்கப்பூர் மாமா, சித்தப்பா, மாமாமார், அத்தைமார் சகல கலையும் கற்று அம்பாள் அருளோடு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

இப்படிக்கு
சோ. பாலச்சந்திரசர்மாவும் பாரியாரும்
விடத்தற்பளை, சம்பாவெளி.

- புளியங்கூடல். [3377]



உ
# அந்தியேட்டி அழைப்பு

திரு. செல்லையா சச்சிதானந்தசிவம்
(வழக்கறிஞரும் பிரசித்த நொத்தாரிசும் ஓய்வு பெற்ற தபால் அதிபரும்)

இறைவனடி எய்தியதையிட்டு பிரமோதூத ஸ்ரீ சித்திரை 18ஆம் திகதி (01-05-90) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு முகத்துவாரத்தில் அந்தியேட்டியும் அடுத்த நாளாகிய 19ஆம் திகதி (02-05-90) புதன் கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிரியைகளும் நடைபெறும்.

அன்பாலும் பண்பாலும் உயர்ந்த எங்கள் இணையற்ற அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய கூட்டுப்பிரார்த்தனை பிரமோதூத ஸ்ரீ சித்திரை 19ம் திகதி (02-05-90) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் விவேகானந்த சபை மண்டபத்தில் ஆரம்பமாகி மதிய போசனத்துடன் முடிவடையும், இவ்வைபவத்திற்குச் சமுகம் தந்து பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள
திருமதி த. சச்சிதானந்தசிவம்
தாய், பிள்ளைகள்.

20, மீரானியா வீதி,
கொழும்பு - 12.

[3372]



## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



மா. சிவபாதசுந்தரம் (பாலன்)

மலர்வு: 26 - 06 - 1948
உதிர்வு: 30 - 03 - 1990

பாசத்தின் சிகரமாய் திகழ்ந்தவனே
உம் பிரிவு எங்களால் என்றும் தாங்க முடியாதது
உம் ஆத்மா ஈடேற்றமடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உம் அன்பு மறவாத
ரவி அன் ராஜ் உரிமையாளர்கள்
சக ஊழியர்கள்

[சி-4346]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இரு மாத காலத்தினுள்
# திக்கம் வடிசாலை இயங்கும்!
# ரஞ்சன் திறந்து வைப்பாராம்!!

கொழும்பு, ஏப் 29

அடுத்த இரண்டு மாதங்களுக்கு இடையில் திக்கம் வடிசாலை திறக்கப்படவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் தோட்டத் தொழிற்றுறை சேவைகள் துணை அமைச்சர் எம்.எல்.எம். அபுசாலியும் திறப்பு விழாவில் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

இத்தகவலைதுணை அமைச்சர் ஜனாப் அபுசாலியே கடந்த புதன்கிழமை கொழும்பு இலங்கைத் தேயிலைச் சபையின் கேட்போர் கூடத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் வெளியிட்டார்.

பனம்பொருள் கைப்பணித் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் அந்த நிகழ்ச்சியின் போது துணை அமைச்சரால் வழங்கப்பட்டன.

ஜனாப் அபுசாலி அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது;-

பனை அபிவிருத்திச் சபை 1978 இல் இருந்து இயங்கி வருகிறது. சபையின் முறையான வளர்ச்சிப் பணிகள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகத்தான் நடந்து வருகின்றன.

ஒரு கோடி 10 லட்சம்பனைகள் நாட்டில் உள்ளன. அவற்றில் 70 லட்சம் பனைகள் யாழ்.குடா நாட்டில் உள்ளன.

பனையின் ஒவ்வொரு அம்சமும் மனிதனின் தேவைக்கு பயன்படுகின்றது. என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

திக்கம் வடிசாலையை மீண்டும் திறக்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. வடிசாலை இயங்கத் தொடங்கியதும் பனஞ்சாராயம்உள்ளூர்ச் சந்தைக்கு விடப்படும். அதேநேரம் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

இன்னும் சில ஆண்டுகளில் வடக்கு- கிழக்குப் பகுதியில் 3 ஆயிரம் பனை கைப்பணிப் பொருள் நிலையங்கள் திறக்கப்படும்.

ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன்யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில பேராசிரியர்களையும் ஆலோசகர்களையுங் இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து போன்றநாடுகளுக்கு அனுப்பி பனை அபிவிருத்தித் துறை பற்றி தெரிந்து கொள்ளநடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த நாடுகளில் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பை கருத்திற் கொண்டு பனைத் தொழில் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

இப்படி துணை அமைச்சர் அபுசாலி சொன்னார்..

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. கே.நடராஜாவும் உரையாற்றினார். (உ-எ)

### ★ காஷ்மீர் பிரச்சினை
# பதற்ற நிலையைத் தணிக்க பாக் - இந்தியா இணக்கம்!

நியூயோர்க் ஏப் 28

காஷ்மீர் பிரச்சினையில் பதற்றத்தைத் தணிக்கவும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் இந்தியாவும் பாகிஸ்தானும் இணக்கம் கண்டன.

நியூயோர்க்கில் கோட்டல் ஒன்றில் இந்திய, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று சந்தித்து இரண்டு மணித்தியாலங்கள்வரை பேச்சுக்கள் நடத்தினர்.

அப்போதே இந்த இணக்கம் காணப்பட்டது.

காஷ்மீர் பற்றிய நிலைப்பாட்டில் இரு நாடுகளும் விட்டுக்கொடுக்காது பேசின (எ)


உடனடி
# வேலை வாய்ப்புகள்
## சவூதி அரேபியாவில்

**1. Aramco Company**
அரம்கோ கொம்பனி

**2. Gulf Cattering Company**
கல்ப் கற்றரிங் கொம்பனி

பின்வரும் வெற்றிடங்களுக்கு சவூதி அரேபியாவில் மேற்படி கொம்பனிகளில் வேலை வாய்ப்புகள் உள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன்பு பாஸ்போட், 6 புகைப்படங்கள் அனுபவச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் உடனடியாக நேரில் சமுகமளிக்கவும். நேர்முகப்பரீட்சை 02-05-90 தொடக்கம் கொழும்பில் வெளிநாட்டு முகவர்களால் நடாத்தப்படும்.

வேலை வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| 01. | Food Service Manager உணவுச் சேவை முகாமையாளர் | — 1,500 S. R. |
| 02. | Asst. Food Service Manager உதவி உணவுச் சேவை முகாமையாளர் | — 1,500 S. R. |
| 03. | Dietician உணவு பரீட்சாத்தகர் | — 1,500 S. R. |
| 04. | Chief Steward பிரதம ஸ்ரூவேட் | — 1,000 S. R. |
| 05. | Chiej Cook தலைமை சமையலாளர் | — 1,000 S. R. |
| 06. | Senior Cook பிரதம சமையலாளர் | — 1,000 S. R. |
| 07. | Cook சமையலாளர் | — 600 - 800 S. R. |
| 08. | Asst. Cook உதவி சமையலாளர் | — 400 - 500 S. R. |
| 09. | Head Baker தலமை பேக்கர் | — 800 - 1000 S. R. |
| 10. | Asst. Head Baker உதவி தலமை பேக்கர் | — 600 - 800 S. R. |
| 11. | Baker பேக்கர் | — 700 - 900 S. R. |
| 12. | Senior Store Keeper தலைமை களஞ்சிய பொறுப்பாளர் | — 800 - 900 S. R. |
| 13. | Store Keepers களஞ்சிய பொறுப்பாளர்கள் | 700 - 800 S. R. |
| 14. | Clerk / Cashier எழுதுவினைஞர்/காசாளர் | — 600 - 700 S. R. |
| 15. | Cafetariya Supervisor உணவக மேற்பார்வையாளர் | — 600 - 700 S. R. |
| 16. | Asst. Cafetariya Supervisor உதவி உணவக மேற்பார்வையாளர் | — 500 - 600 S R. |
| 17. | Sanitary Supervisor சுகாதார மேற்பார்வையாளர் | — 600 - 700 S R. |
| 18. | Janitor (General Assistant) பொது உதவியாளர்கள் | — 300 S. R. |
| 19. | Waiters Male வெயிற்றர்கள் | -- 350 S. R- |
| 20. | Waiters Female பெண் வெயிற்றர்கள் | — 350 S. R. |
| 21. | Drivers சாரதிகள் | — 600 - 700 S. R. |
| 22. | Assistant Dietician உதவி உணவு பரீட்சாத்தகர் | — 600 - 800 S. R. |

மேற் கூறிய வேலை வாய்ப்புகளுக்கான நேர்முகப் பரீட்சை 02 - 05 - 1990 இல் கொழும்பில் பிரதம முகவர் நிலையத்தில் நடைபெற இருப்பதினால் 1ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக அனுபவச் சான்றிதழ்கள் சகிதம் உடன் தொடர்பு கொள்ளவும்.

**156, 1ம் குறுக்குத் தெரு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
[சி-4351]


## இன்று பேச்சு கட்டுரை போட்டி

கொழும்புத்துறை, ஏப் 29

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளை பேச்சு, கட்டுரைப் போட்டிகளை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ் மத்தியகல்லூரியில் நடத்துகிறது.

ஏற்கனவே விண்ணப்பம் அனுப்பியோர் மட்டும் இப் போட்டிகளில் பங்கு பற்றலாம்! (ப-30)

## திறப்பு விழாவும் நிறைவு விழாவும்

கொழும்புத்துறை ஏப் 29

மாகியம்பதி சூரியோதய சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நிலையத் தலைவர் திரு. செ. செல்வநாயகம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும்.



திருகோணமலையில் அன்னை பூபதியின் நினைவாக இடம் பெற்ற எழுச்சி ஊர்வலத்தின் போது எடுத்த படம். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.பிரபாகரனின் படம் உழவு இயந்திரத்தில் வைத்து எடுத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (இ - 150)

### 15 லட்சம் வீடுகள்
# குடும்பங்களை பதியும் வேலை கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி ஏப். 29

நாடு முழுவதும் 15 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக் கடன் வழங்குவதற்கான குடும்பங்களை பதிவு செய்யும் வேலைகள் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பமாகி உள்ளன.

மாதம் 2,400 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் அரச ஊழியர் உட்பட எல்லோருக்கும் இந்த கடன் வழங்கப்படும்.

12,500 ரூபா பெறுமதியான இந்த கடன் தொகைக்கு 6 சதவீதவட்டி அறவிடப்படும் கடனை 15 வருடங்களில் திருப்பி செலுத்த வேண்டும்.

இந்தக்கடனை பெற விரும்புவர்கள் அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பணி புரியும் வீடமைப்பு உத்தியோகஸ்தர்களிடம் 2ரூபா பணம் கட்டி விண்ணப்ப படிவத்தை பெற்று மே 23ஆம் திகதிக்கு முதல் பூர்த்தி செய்து ஒப்படைக்கும்படி தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் திரு. க. கந்தசாமி தெரிவித்தார். (இ-76)

# தென்பகுதியின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிந்துதான் இருக்கின்றன.

நாம் இந்தியப் படையுடனும், சிங்களப் படையுடனும் யுத்தம் நடத்திஇருக்கிறோம். ஆனால் இந்தியரான தேனிசைச் செல்லப்பா இங்கு இசை நிகழ்ச்சி நடத்தினால் அதைப் பார்க்க லட்சக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். அதே வேளை ஒரு சிங்களப் பாடகர் இங்கு வந்து பாடினால் அவ்வளவு மக்கள் வரமாட்டார்கள். இதற்குக் காரணம்நாம் தமிழகத்துடன் வரலாற்று, கலாசார ரீதியில் பின்னிப்பிணைக்கப்பட்டவர்கள் என்பதே.

இங்கே மக்கள் அழிகின்றபோது அங்கே அவர்கள் கண்ணீர் விட்டார்கள்; துடித்தெழுந்தார்கள்.

அண்மையில் இந்தியப்படை திரும்பிச் சென்றபோது தமிழகத்தில் தங்களுக்கு உரிய வரவேற்பு அளிக்கப்படவில்லை என அமைதிப்படைத் தளபதி கல்கத் இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

அமைதிப்படை இங்கு சரிவர தனது பணிகளை மேற்கொண்டது எனத் தமிழ் நாட்டு மக்கள் நினைத்திருந்தால் அங்கு அவர்களுக்குப் பெரும் வரவேற்பையல்லவா வழங்கியிருப்பார்கள்?

சிங்கள அரசு ஒருபுறம் எங்களுடன் பேசிக்கொண்டு மறுபக்கத்தில் சிங்களவரைக் குடியேற்றி வருகிறது.

எனவே நாம் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

நாம் எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்க வேண்டிய காலம் இது இவ்வாறான வேளையில் தொழிற்சங்கங்களும் எம்முடன் இணைந்து எமது கையை வலுப்படுத்த வேண்டும் — என்றார்.

கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜனும் கலந்துகொண்டார். வர்த்தக ஊழியர்களும் அதிகளவில் கலந்துகொண்டனர்.

வர்த்தக ஊழியர்களின் வேலை நேரம், ஊழியர் சேமலாப நிதி, சம்பளம், சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் ஓய்வு வழங்குதல் ஆகியவை உட்பட பல விடயங்கள் பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டன.

பல வர்த்தக [illegible] ஊழியர்கள் சார்பில் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

★ சனிக்கிழமைகளில் பகல் 2 மணியுடனும், ஞாயிறு மற்றும் போயா தினங்களில் முழு நாளும் லீவு விடப்பட வேண்டும்.

★ ஆண், பெண் இருபாலாருக்குமான சம்பளம் அடிப்படையில் 1500 ரூபாவாக இருக்கவேண்டும். அரசஊழியருக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக்கான சம்பள உயர்வு இந்த ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

★ 6 மாதத்திற்கு மேலாக வேலை செய்வோர் நிரந்தரமாக்கப்பட்டு, சேமலாப நிதி திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

★ ஊழியர் ஒருவர் விபத்துக்குள்ளானால் அவருக்குத் தொழில் கொடுப்போரிடமிருந்து விபத்து நிதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

★ 8 மணிநேரத்திற்கு மேல் வேலை செய்யும் பட்சத்தில் மேலதிக வேதனம் வழங்கப்பட வேண்டும்.

★ காரணமின்றி வேலையிலிருந்து நீக்கினால் அரச விதிப்படி வேதனம், நஷ்டஈடு என்பன வழங்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு வீதிக்கும் நான்குபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்த வீதியில் உள்ள நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் சங்க விதிமுறைக்கு உட்பட நடத்தப்படுகின்றார்களா என்பது கண்காணிக்கப்பட வேண்டும்

★ 1987 இன் பின்னர் அசம்பாவிதங்களில் வேலை இழந்தவர்களுக்கு அரசிடமிருந்து நிவாரணம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

★ ஊழியர்களின் பிரச்சினைகளை ஊழியர் சங்கமும் தொழில் திணைக்களமும் தீர்த்து வைக்கவேண்டும்

★ விடுமுறை நாட்களில் திறந்திருக்கும் வர்த்தக ஸ்தாபனங்கள் மீது ஊழியர் சங்கமும், தொழில் இலாகாவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயங்கள் குறித்து வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனும் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்துடனும் தொழில் திணைக்களத்துடனும் பேச்சு நடத்தி முடிவு காண்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

வர்த்தக ஊழியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. (உ-9)

## இலங்கை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓடுவதற்குத் தரமற்றவை என கழித்து விடப்பட்ட பல வாகனங்கள் இங்கு சேவையில் ஈடுபடுகின்றன.

உதாரணமாக உயரம் குறைந்த மினிபஸ்களை தெற்கில் சேவையில் ஈடுபடுத்தத் தடை விதித்துள்ளனர். அவை அனைத்தும் இங்கு கொண்டு வரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இவற்றைத் தடுக்கும் முகமாகவே இந்த அனுமதிச் சான்றிதழ் வழங்கும் நடைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது.

— இவ்வாறு மேலும் தெரிவித்தார். (உ-6)

## ஜே.வி.பி---

ளனர்.

இன்னொரு தொகுதி ஆயுதங்கள் விரைவில் அழிக்கப் படவுள்ளன என்றும் அந்தப் பொலீஸ் அதிகாரி சொன்னார். (ஒ-எ)

## சுலோக...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய கட்டடங்களைச் சுற்றிப் பார்வையிட்ட பின்னர், பெருந்திரளாக சுலோக அட்டைகளுடன் குழுமியிருந்த பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களை அருகிலிருந்த உதவியாளர்களிடம் கமெராவைப் பெற்று படம் பிடித்துக் கொண்டார்.

பின்னர் மாணவர்கள் வைத்திருந்த ''மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தொழில்நுட்ப கல்லூரிமாணவர்களை நடாத்தாதே'' எனும் சுலோக அட்டையை வாங்கி மாணவர்களுடன் சேர்ந்து படத்திற்கு 'போஸ்' கொடுத்தார்.

பிராந்திய நிலையத்திற்கு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களை அழைத்து ''எல்லோருக்கும் வணக்கம்'' என்று முதலில் [illegible] அவர்களின் குறைகளை அவர் அக்கறையுடன் [illegible] மடுத்தார். (இ-69)

# கொழும்பு விடுதிகளில் புறா இறைச்சிக் கறி!

கொழும்பு, ஏப்ரல் 29

கொழும்பில் உள்ள சிறிய உணவுவிடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் புறா இறைச்சியும் பரிமாறப்படுகிறது

புறா இறைச்சிக்கறி உண்பவர்கள் எண்ணிக்கையும் கொழும்பில் அதிகரித்து வருகிறதாம்.

ஹோட்டல்களுக்கு 6 அவுன்ஸ் எடையுள்ள ஒரு புறா 35 ரூபா முதல் 40ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

கோழி இறைச்சிக்குப் பதிலாக புறா இறைச்சியை இவ் விடுதிகள் தயாரிக்கின்றன.

புறா இறைச்சி, முடக்குவாதம், கழுத்துப் பிடிப்பு, நசைநார் நோவு ஆகியவற்றுக்கு நல்லது என்று கூறப்படுகிறது. அதனால் புறா இறைச்சியை விரும்பி உண்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. (ஒ-எ)

# ஐ. சோ. மு. மே தினம்; கூட்டாக நடத்துவதில் 'லடாய்'

கொழும்பு, ஏப். 29

மேதினத்தைக் கூட்டாகக் கொண்டாடுவதில் ஐக்கிய சோஷலிச முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

முதலில் சந்திரிகா குமாரணதுங்காவின் ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பிரிவு உட்பட சகல அங்கத்துவக் கட்சிகளும் சேர்ந்து மேதினத்தைக் கொண்டாட முடிவுசெய்யப்பட்டது.

ஆனால் பின்னர் மே தினக் கூட்டத்திற்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமைவகிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நவ சம சமாஜக்கட்சி, கூட்டு மேதின விழாவில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

இவர்கள் இப்படி 'லடாய்' நடத்திக்கொண்டிருக்கும் வேளை, ஐக்கிய சோஷலிச முன்னணிக்கு மேதினம் நடத்த ஏற்கனவே ஒதுக்கிய இடத்தை ஒஸிஅபய குணசேகரா தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பிரிவுக்கு மாற்றிவிட்டது பாதுகாப்பு அமைச்சு.

கூட்டு மே தினத்துக்குத் தலைமைவகிக்கவேண்டும் என்பதில் தனக்கு அக்கறை இல்லை என்று சந்திரிகா தெரிவித்துவிட்ட போதிலும், சோஷலிச முன்னணியின் மே தினவிழா எப்படி நடக்கும் என்பதுகுறித்து எவ்வித தெளிவும் இன்னும் ஏற்படவில்லை. (அ)

# தியாக வேங்கைகளது கனவை ஒன்றுபட்டு நனவாக்குவோம்
## நெடுந்தீவில் காஸ்ரோ உரை

நெடுந்தீவு. ஏப் 29

'எமது விடுதலைக்காக களத்தில் வீரப்போர் புரிந்து தியாக மரணம் எய்திய வேங்கைகளின் இலட்சியக் கனவு நனவாக நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

வீரமரணம் எய்திய விடுதலை வேங்கை நெல்சனின் ஞாபகார்த்தக் கூட்டம் அண்மையில் நெடுந்தீவில் நடைபெற்றபோது விடுதலைப் புலிகள் தீவக அரசியல் பொறுப்பாளர் காஸ்ட்ரோ முன்கண்டவாறு பேசினார்,

திரு. ஜே. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிமியோன் அந்தோனிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## வாகனங்கள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பத்தில் வாகனத்தின் பதிவுஎண், அடிச்சட்ட எண், எந்திரவகை, சில்லுதளம், நிறம், எஞ்சின், இளச்.இயர்பெட்டி, செலுத்து முறை, பின் அச்சாணி, முன் அச்சாணி, சில்லு, ரயர், விசலுத்தடு அடிச்சட்டகம், பிரேக், எரிபொருள் தொகுதி, மின்இணைப்புக்கள் ஆகியவை உட்படப் பல விடயங்கள்பற்றிய தகவல்கள் கோரப்பட்டிருக்கின்றன.

வாகனங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரங்களை விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கும்போது. மேற்கூறப்பட்ட —வாகனத்தின் பாகங்கள் — நல்ல — செயற்படக் கூடிய நிலையில் இருக்கின்றனவா என்பது பரிசோதிக்கப்படும்.

இதற்காக விசேட பரிசோதனைக்குழு ஒன்று செயற்படும்.

இந்தக்குழுவில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், மற்றும் வாகன சாரதிகள், தொழில்நுட்பவியலாளர்கள், வாகனம் திருத்துபவர்கள் போன்றோர் இடம்பெறுவர்.

பரிசோதனையின் போது வாகனம் நல்லநிலையிலிருப்பதாகத் திருப்தி தெரிவிக்கப்பட்டால் அது வீதியில் போக்குவரத்தில் ஈடுபட அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

பரிசோதனையின் போது பிரஸ்தாப வாகனம் போக்குவரத்துக்குத் தகுதியற்றதாகக் காணப்படின், வாகனத்திலுள்ள பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டு அவற்றைத் திருத்திக்கொண்டுவரும்படி வாகன உரிமையாளர்களுக்கு மேலும் ஒரு அவகாசம் வழங்கப்படும்.

அனுமதிச் சான்றிதழ் பெறாத வாகனங்கள் வீதியில் செலுத்துவதற்கு தடை விதிக்கப்படும் என்றும் அறியவருகிறது. (ஓ-உ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வி உ. கார்த்திகா

மேற்கு ஜேர்மனியில் வசிக்கும் உதயகுமார் கிருஷ்ணகுமாரி தம்பதிகளின் மகள் கார்த்திகா தனது முதலாவது பிறந்த தினத்தை மேற்கு ஜேர்மனி இல்லத்தில் இன்று (29 - 04 - 1990) வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, சவீதா அக்கா, குமணன் அண்ணா, ஞானிகா அக்கா, ஜேர்மனியில் வசிக்கும் சித்தப்பா இந்திரகுமார், சித்திமார் சாந்தகுமாரி, நந்தினி, மாமன்மார் பாஸ்கரன், சசிதரன், உற்றார், உறவினர்கள், துன்னாலையில் வசிக்கும் அம்மப்பா துரைச்சாமி, அம்மம்மா புனிதவதி, மாமன் பிரபாகரன், சுன்னாகத்தைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, மாமன்மார் மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், சிங்கப்பூரைச் சேர்ந்த மாமி, பிள்ளைகள் எல்லோரும் பிள்ளையார் அருள் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

துரைச்சாமி,
கலிகைச் சந்தி, துன்னாலை தெற்கு,
கரவெட்டி. [3146]

## A/L 90 PHYSICS

திரு. கணேசன் B. Eng.

சடப்பொருளியல்

Properties of Matter

சனி / ஞாயிறு } 12.30

ஆரம்பம்: 05. 05. 1990

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4332)


## இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் 1990 ஆம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதி தொடக்கம் காங்கேசன் துறை வீதி இல. 536/1 இல் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக சகலருக்கும் அறிவிக்கப்படுகிறது.

தொலைபேசி இல. 1) 025 — 2840
2) யாழ்ப்பாணம் 2284

வே. கந்தசாமி,
பிரதி பொது முகாமையாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்.
(சி-4475)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### யோசவ் சைனேஸ்

மலர்வு: 21 - 10 - 1967
உதிர்வு: 29 - 04 - 1988

எம் கண்ணீரை மாலையாக்கி உன் பாதமலருக்கு எம் காணிக்கையாக்குகிறோம். உனக்கும் உன் ஆத்ம சாந்திக்காய் நாம் அனைவரும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை இங்கு இறைஞ்சுகிறோம்.

உன் நினைவை மறவாத
தந்தை, தாய், சகோதரிகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

உப்புக்குளம்,
மன்னார். [12947]

★திபெத்தின் எதிர்காலம் பற்றி

# சீன அரசுடன் பேசத் தயார் என தலாய்லாமா மீண்டும் அறிவிப்பு

பிரஸ்ஸல்ஸ், ஏப் 28

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மனித உரிமைக் குழுவின் முன்னால் திபெத்தின் ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா சாட்சியமளித்தார்.

திபெத்தில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி அப்போது தலாய்லாமா குழுவிடம் விவரித்தார்.

1988 இல் திபெத் பிரச்சினைக்கு தீர்வு காணச் சமர்ப்பித்த யோசனைகளே ஆகக் குறைந்தபட்சமானவையென்று தலாய்லாமா மீண்டும் உறுதிப்படுத்தினார்.

திபெத்துக்குச் சுயாட்சிவழங்கப்படவேண்டும். வெளியுறவு சம்பந்தமான கொள்கைகளை சீன அரசு வைத்துக்கொள்ளலாம்- இதுவே அச்சமயம் தலாய்லாமா சமர்ப்பித்த யோசனையாகும்.

ஐரோப்பிய நாடாளுமன்ற மனிதஉரிமைக் குழுமுன் சாட்சியமளிக்கையில்,

இந்தக்குறைந்தபட்ச யோசனையைசீனா ஏற்றுக்கொள்ள மறுத்தால் திபெத்தின் கடுமையான புதிய யோசனைகளை நான் முன்வைக்க வேண்டிவரும். அதனை இப்போது நான் வெளியிட மாட்டேன்.-என்று தலாய்லாமா சொன்னார்.

உலகில் பல பகுதிகளில் ஏற்பட்டு வரும் ஆட்சிமாற்றங்கள் போன்று சீனாவிலும் அடுத்த பத்தாண்டுகளில் ஆட்சி மாற்றம் ஏற்படும்என்றும் தலாய்லாமா குறிப்பிட்டார்.

சீனாவுடன் திபெத்தின் எதிர்காலம் பற்றிப் பேச்சுக்கள் நடத்தத் தயாராகஇருப்பதாகவும் தலாய்லாமா சொன்னார், (எ)

# நிக்கரகுவா ஜனாதிபதியாக ஷாமொறா பதவி ஏற்றார்!

மனாகுவா ஏப் 28

திருமதி வயலெற்றா ஷாமொறா நிக்கரகுவாவின் ஜனாதிபதியாக நேற்றுப் பதவி ஏற்றார்.

பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் ஆயுதப் படைகளின் பிரதம தளகர்த்தா பதவியையும் தானே வகிக்கப்போவதாக திருமதி ஷாமொறா அறிவித்தார்.

ஆனால்இராணுவத்தளபதியாக இருந்து பதவி விலகிய ஜெனரல் டானியல் ஒற்றேகாவின் தம்பியான ஜெனரல் ஒற்றேகாவையே தொடர்ந்து வைத்திருக்கப் போவதாக அவர் அறிவித்தார்.

திருமதி ஷாமொறாபதவி ஏற்றபோது, அவரது ஆதரவாளர்கள் குழுமி நின்று பதவி விலகும் ஜனாதிபதிக்கு எதிரானகோஷங்களை எழுப்பினர். (எ)

## Vespa [வெஸ்பா] ஸ்கூட்டர் 96 C.C

புதிய கவர்ச்சியான, சிக்கனமான
வெஸ்பா ஸ்கூட்டர்
கலனுக்கு 260 K.M வேலை செய்யும்
Electronic Ignition Side Lights

தொடர்பு:-
3, நவீன சந்தை (மேல் மாடி)
யாழ்ப்பாணம்.
[சி-4326]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 07 | 04 | 1933
உதிர்வு: 30 | 03 | 1990

### திருமதி நடராஜகுமாரன் ஜெயமணி

உறக்கமில்லாமல் எமைக் காத்து உடைகள்
ஒழுங்காகத் தந்து மறக்க முடியாமல்
ஆக்கிவிட்டு மறைந்தனையோ அம்மா!
வாயிலில் காத்து நின்று வந்த பின்
மனதார வயிறார மகிழ்ச்சி தந்த
தூய உள்ளங்கள் அன்பு வற்றாதே
தூர நீ சென்றனையோ அம்மா!
துயில் கொள்வோமா? நாம்.

மீளமுடியாத சோகத்தை உங்கள் காலடியில் கண்ணீர்ப் பூக்களால் காணிக்கையாக்குகின்றோம். ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்ப தலைவியின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

அன்புக் கணவர்,
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காஞ்சிபுரம்,
மாதகல். (3363)

### லித்துஏனியா அரசு பரிசீலனை

மாஸ்கோ, ஏப் 28

சுதந்திரப் பிரகடனத்தை இடை நிறுத்தி வைத்து பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும்படி மேற்கு ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அதிபர்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளைப் பரிசீலனை செய்யப் போவதாக லித்துஏனியா ஜனாதிபதி லான்ட்பேர்கீஸ் அறிவித்துள்ளார். (எ)

### பஞ்சாயத்து கலைப்பு

காத்மண்டு, ஏப்28

நேபாளத்தில் உள்ள 33நகர, மாநகர சபைகள், 76 மாவட்ட சபைகள் 4, 022 கிராம பஞ்சாயத்துக்களை பிரதமர் கிருஷ்ண பிரசாத் பத்தாரி தலைமையிலான அரசு நேற்றுகலைத்து விட்டது.

புதிய அரசு பதவி ஏற்றதன் பின்னர் எடுத்த முக்கிய நடவடிக்கை இது என்று சொல்லப்படுகிறது. (எ)

### ஆயுத விநியோகம் அதிகரிப்பு

காபூல், ஏப் 28

ஆப்கானில் உள்ள நஜிபுல்லா அரசுக்கு ஆயுதங்களை வழங்கி வருவதை சோவியத் அரசு அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு வந்து காபூலில் இறக்கும்சோவியத் விமானங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாக காபூலில் உள்ள ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இதனிடையில் — காபூலில் கடந்த செவ்வாய்க் கிழமை அரசுக்குச் சொந்தமான இராணுவ ஆயுதக்கிடங்கு ஒன்று தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று தொடர்பாக 80 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது, இவர்களில் ஒருவர் மேஜர் ஜெனரல் ஆவார் (எ)

குமுலுஸ் D.F. போட்டி


# BASF
# குமுலுஸ் D.F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

பெயர் ______
முகவரி ______
______
வியாபாரியின் பெயர் ______
______
முகவரி ______
______

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுளை
## ஆர். வைத்தியலிங்கம் அறநிதி
## கல்விப்புலமை உதவிநிதி
## 1989 — 1990

பதுளை ஆர். வைத்தியலிங்கம் அறநிதி, புங்குடுதீவை வசிப்பிடமாகவோ அல்லது பிறப்பிடமாகவோ கொண்ட திறமை வாய்ந்த, ஆனால் பண வசதி குறைந்த மாணவர் ஒருவருக்கு மாத்திரம் கல்விப் புலமை உதவி நிதி வழங்கவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். இத்தகைய மாணவர், வைத்தியம், பொறியியல், கட்டிடக்கலை, சட்டம், வர்த்தகம், விவசாயம், சங்கீதம் ஆகிய துறைகளுள் எவற்றுக்காகவேனும் இலங்கையில் அல்லது இந்தியாவில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் அல்லது கல்லூரியில் 1989/1990ஆம் ஆண்டின் போது முதலாம் ஆண்டுக் கற்கைக்கு அனுமதி பெறும் மாணவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் இத்தகைய மாணவர் இயைந்த துறையில் முதலாவது பூரண பட்டம் பெறும் வரை, ஆனால் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத காலம் வரை, ஒருவர் ஆண்டொன்றுக்கு ஏழாயிரம் ரூபா (7,000/-) வரையில் உதவி நிதியாகப் பெறுவார்.

இவ்வாறு உதவிநிதி பெறும் மாணவர் பட்டப் படிப்பை முடித்து, வருவாய் தரும் தொழிலில் ஈடுபட்ட பின்னர், புலமை உதவி நிதியை இலகுவான தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுவர்.

இப்புலமை உதவி நிதி 1989 - 1990 ஆம் ஆண்டு மாணவருக்கே மட்டுப்படுத்தப்படுகிறது

இவ்வுதவி நிதிக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழ்க் காணும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. க. பொ. த (உ. த) பரீட்சையில் சித்தி எய்தி இயைந்த ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவகம் அல்லது கல்லூரியில் பயில அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
2. வேறு ஏதேனும் புலமைப் பரிசிலை அல்லது உதவி நிதியைப் பெறுபவராக இருக்கக்கூடாது.
3. மாணவரது பெற்றோர், பிள்ளையின் மேற்படிப்புக்கு உதவக் கூடிய அளவு வசதி இல்லாதவராக இருத்தல் வேண்டும்.
4. முழு நேர மாணவராகவும், மேற்கொண்ட படிப்பு முடிவுறும் வரை, வருவாய் தரும் தொழில் எதிலும் ஈடுபடாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. 31-07-1990இல் இருபத்து மூன்று (23) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்காண்பவருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

அறங்காவலர்,
**பதுளை ஆர். வைத்தியலிங்கம் அறநிதி,**
215 ஈ 2/1 பார்க் வீதி,
கொழும்பு — 5.

விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுதல் முடிவுறும் திகதி: ஜூன் 15, 1990 செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஜூலை 31, 1990 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடிவாறு மேற் காணப்படும் முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

[12379]



## முதலாம் வருட நினைவஞ்சலி



**கனகசபை சண்முகசோதி**
[செல்வம் - தேவன் T. K. S. றேட்ஸ்]

| அன்னை அழைப்பில்: | ஆளவந்தோர் அணைப்பில்: |
|---|---|
| 30 03-1964 | 09-05-1989 |

**திதி:- 29 - 04 - 1990**

மானிட வாழ்க்கையென்பது மரணிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இது நியதி ஆனால் உமது மரணமோசதிகாரக் கும்பலினால் மரணிக்க வைக்கப்பட்டது. இது அநீதி நாம் உம்மை இழந்து ஒரு வருடமானாலும் உமது சோதி ஒளிபொருந்திய முகத்தின் சிரிப்பு எமது கண்முன்னே தினமும் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**திருமதி கனகசபை குடும்பத்தினர்**

சோதி வீதி,
காங்கேசன் துறை.

(12397)


கோப்பாய் -- சரசாலை -- மணிப்புரி பகுதிகள் பாதிப்பு

# கோமாரி வேகமாகப் பரவுகிறது

### தடுப்பூசியுடன் மட்டும் நின்று விடவேண்டாம் என ஆலோசனை

கொழும்புத்துறை, ஏப் 29

யாழ் மாவட்டத்தில் கோமாரிநோய் வேகமாகப் பரவுகிறது. கோப்பாய், சரசாலை, மணிப்புரி ஆகியவையே இந்த நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆகும். இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு தடுப்பூசி போடுவதுடன் நின்றுவிடாது மேலும் பல நடவடிக்கைகள் கால்நடை வளர்ப்போர் மேற்கொள்ள வேண்டும் என்று கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

மாடுகள் மாத்திரமன்றி ஆடுகளும், செம்மறி ஆடுகளும் இந்நோயால் பாதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தடுப்பூசி போடுவதினால் மட்டும் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

நோயைக் கட்டுப்படுத்த மேற் கொள்ளப்படவேண்டிய மாற்றும் நடவடிக்கைகளாவன:-

★ புதிதாக ஆடுகளையும், மாடுகளையும் வாங்காதிருத்தல்.

★ மாடுகளையும், ஆடுகளையும் அவிழ்த்து விடக் கூடாது.

★ தோட்டங்களிலும், வயல்களிலும், பாதை ஓரங்களிலும், கால் நடைகளை மேய விடக் கூடாது.

★ பொது நீர் நிலைகளான குளங்களிலும், கேணிகளிலும் நீர் அருந்த விடக்கூடாது.

★ கால் நடைகளை இடம் விட்டு இடம் மாற்றக்கூடாது.

நோய் கண்ட மாடுகளைக் கொன்று அழிக்குமாறும், அப்படி நோயின் காரணமாக அழிக்கப்படும் மாடுகளுக்கு ஒருகிலோ கிராம் உயிர் நிறைக்கு ரூபா 6. 50 வீதம் நஷ்ட ஈடு கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்படும். எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ - 30)

# அந்நிய கலாசார எதிர்ப்பில் சைவப்பாடசாலைகளே கேடயம்

### சைவமகாஜன வித்தி. பொன் விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஏப் 29

"எமது முன்னைய தலைமுறையினரின் நல்ல தொண்டுகளினால் நாடெங்கும் சைவப் பாடசாலைகள் ஏற்பட்டன. அவை அந்நிய கலாசாரத்தின் தாக்குதலில் இருந்து எம்மைக் காக்கும் கேடயங்களாக உதவுகின்றன."

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் பொன் விழாவின் முதற் கட்ட நிகழ்ச்சியான பகிரங்கப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேருரை நிகழ்த்திய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு வித்தியாலய அதிபரும், ஏழாலைக் கொத்தணிப் பாடசாலைகள் உதவி அதிபருமான திரு. வீ. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமை வகித்தார்.

மங்கள விளக்கேற்றித் திருமுறை ஓதலின் பின் பொன் விழா நிகழ்ச்சியைக் குறிக்கும் பயன் தரும் மரங்களை நாட்டி வைப்பதில் பிரதம விருந்தினரும், சிறப்பு விருந்தினராகச் சமூகமளித்திருந்த மல்லாகம் கொத்தணி அதிபர் திரு. அ. மகாதேவன் பீ. ஏயும் ஈடுபட்டனர். வரவேற்புரையை வித்தியாலய சைவ சமய ஆசிரியை திருமதி. அம்பிகா சிவசுப்பிரமணியம் நிகழ்த்தினார்.

மல்லாகம் கொத்தணிச் செயலாளர் திரு சி. அருளையா உட்பட மற்றும் பலரும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

(க)

## சுண்டிக்குளியில் ஊஞ்சல் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப் 29

யாழ். சுண்டிக்குளி சனசமூக நிலையத்தில் ஈஸ்ரர் விழா கொண்டாடப்பட்டது. அன்று நிலைய முன்றலில் சிறுவர்களுக்கான ஊஞ்சல் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழா நிலையத் தலைவர் திரு. ஜே. எம். ரி. அன்ரனி நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பரியன்னை பேராலயத்தின் பங்குத் தந்தையும் விழாவில் கலந்துகொண்டார்.

நாடகம், கவிதைப்போட்டி உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(ஒ)

## யாழ். பொலீஸ் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ் - பொலீஸ் நிலைய பொலீஸ் பொறுப்பதிகாரியாக திரு.கே. சந்திரமோகன் வெள்ளிக்கிழமையன்று பதவி ஏற்றார்.

பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் பதவியுயர்வு பெற்று முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்தே இவர்பதவியேற்றுள்ளார்.

இவர் முன்பு மாங்குளம் பொலீஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்தார்.

(இ-3)

## சுற்றுமதில்

கிளிநொச்சி, ஏப்ரல் 29

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரிக்கு சுற்றுமதில் கட்டும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி கல்வி திணைக்களத்தினால் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ-76)

## உணவு முத்திரை

புங்குடுதீவு, ஏப்ரல் 29

புங்குடுதீவில் இவ்வாண்டுக்கான உணவு முத்திரைகள் இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் வழங்கப்பட்டன. அரச அதிபர் செயலகத்தில் செய்யப்பட்ட பதிவுகளின் கிரமப்படி ஏனைய பிரிவுகளிலும் இவ்விநியோகம் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

(ப-ரி)

இளம் எழுத்தாளர்கள்

# சமுதாய பிரச்சினைகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டும்

### எழுத்தாளர் பட்டறையில் உரை

குருநகர், ஏப் 29

சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் பிரச்சினைகளுக்கு பயிற்சி நெறிகளைப் பெறுகின்றஇந்த இளம் எழுத்தாளர்கள் எதிர்காலத்தில் வடிவம் கொடுக்க வேண்டும் வெறுமனே எழுத்துக்களை அடுக்கி, சொற்குவியல்களைத் தரும் முறையைத் தவிர்க்க வேண்டும்.

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் இளம் எழுத்தாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை 3 நாட்கள் கைதடி நவீட் பாடசாலையில் நடைபெற்றது.

பட்டறையில் உரை நிகழ்த்திய திரு. வி. ஜி. தங்கவேல் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவின் பிரதித் தலைவர் திரு. க. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடந்த இப்பயிற்சிப் பட்டறையை கலாநிதி சி. மௌனகுரு நெறிப்படுத்தினார்.

நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. எஸ். கே. டேவிட் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

செல்வி. வி. தர்மினி நன்றியுரை வழங்கினார்.

(இ-51-31)

# இளைய தலைமுறையினரின் வளர்ச்சிக்காக உழைப்பவர்

### —மதுரநாயகம் அடிகளாருக்கு பாராட்டு

குருநகர், ஏப்.29

"மதுரநாயகம் சுவாமி யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் உயர் பதவிகளை வகித்தவர். குரு முதல்வராக இருந்தபோது ஆயரின் பிரதிநிதியாகச் சென்று பல பிரச்சனைகளைச் சுமுகமாகத் தீர்த்து குருமாருக்கு கீர்த்தி ஏற்படுத்தியவர்"

அதி-வண ரி.ஏ ஜே. மதுரநாயகம் அடிகளது குருத்துவச் சேவையின் 50 ஆண்டுகள் நிறைவு குறித்து கிளிநொச்சி லோங்ஸ் நிறுவனம் நடத்திய பாராட்டு விழாவில் பேசிய வண-யேம்ஸ் பத்திநாதர் அடிகள் மேற் கண்டவாறு கூறினார்.

வைபவத்தில் நடைபெற்ற கூட்டுத்திருப்பலியை வண-மதுரநாயகம் அடிகளுடன் அமலமரித் தியாகிகள் சபைத் தலைவர் வண - லூயிஸ் பொன்னையா, குரு முதல்வர் வண - ஏ. மைக்கல்சாமி, பரந்தன் பங்குத்தந்தை வண-பிதா, சி. ஓம்லோ அடிகள் ஆகியோர் இணைந்து ஒப்புக் கொடுத்தனர்.

யாழ். மன்னார் மறை வட்டங்களைச் சேர்ந்த குருமார்கள், கன்னியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரும் இந்நிறைவு விழாவில் பங்கேற்றனர்.

வண.பிதா யேம்ஸ் பத்திநாதர் அடிகள் தொடர்ந்து பேசுகையில்;

"மதுரநாயகம் அடிகள் யாழ். சென்: பற்றிக்ஸ், அனுராதபுரம் சென்யோசெப் கல்லூரிகளின் அதிபராகக் கடமைபுரிந்தவர் அவரது வாழ்க்கையின் பெரும்பாகம் பாடசாலைகளில் இளைஞர்களுடனே செலவானது கிளிநொச்சியில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கும் நோக்கில் இந்நிறுவனத்தை நடத்திவரும் அவருக்கு இறைவன் நல்லாசிகளை வழங்கட்டும்" என்றார்.

(ப-51)

## கட்டுப்பாடு நீக்கப்பட்டது

கொழும்பு, ஏப்ரல் 29

சுங்கத் திணைக்களத்தில் ஏற்படும் காலியிடங்களுக்கு ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்கு இருந்துவந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டு விட்டது.

அமைச்சரவை இது சம்பந்தமாக அண்மையில் முடிவு செய்தது.

(உ-எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.



# உதயன்

29 - 04 - 1990 ஞாயிற்றுக்கிழமை



பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.


## யாழ். பொது நூலகத்துக்கு பெறுமதிமிக்க சட்டப் புத்தகங்கள்

### நாளை கையளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம் ஏப் 29

யாழ். மாநகர சபையின் பொது நூலகத்திற்கு விலை உயர்ந்த சட்டப் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப் படவுள்ளன.

இது தொடர்பான வைபவம் ஒன்று நாளை திங்கட்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

அண்மையில் காலமான சட்டத்தரணி ஒருவர் தமது சட்டப்புத்தகங்களை யாழ். பொது நூலகத்திற்கு வழங்கும்படி தமது உயிலில் குறிப்பிட்டிருந்தார். அந்தப் புத்தகங்களே நாளை கையளிக்கப்பட இருக்கின்றன.

யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் கலாநிதி. கனகசபை மேற்படி புத்தகங்களை யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.வி. பி. பாலசிங்கத்திடம் கையளிப்பார்.

(ஒ-9)

மாலை 6மணி முதல் இரவு 9மணி வரை

## மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஏப் 29

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட குருநகர், மடத்தடி, தொடர்மாடிப்பகுதி மற்றும் பாஷையூர் ஆகிய பகுதிகளில் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை அத்தியவசியத் தேவைகளுக்கு மட்டுமே மின்சாரத்தை பயன்படுத்தும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்தில், எடுக்காத பட்சத்தில் மேற்கண்ட பகுதிகளுக்கு குறிப்பிடப்பட்ட நேரங்களில் மின்சாரத்தை சுழற்சி முறையில் வழங்கவேண்டிய தேவை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் விடுத்துள்ளார்.

மேற்படி பகுதிகளிலுள்ள 4 உப மின் நிலையங்களும் இரவு 6 மணிமுதல் 9 மணி வரை அதிக மின் அழுத்தத்தை தாங்க வேண்டியுள்ளது. இதனால் அவை செயலிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்பட்டால் இப்பகுதி மக்கள் பல நாட்களுக்கு மின்சாரத்தைப் பெற முடியாதநிலை ஏற்படும் என்றும்–

ஆதலால்இரவு6மணிக்கும் 9 மணிக்கும்இடைப்பட்டநேரத்திக்குளிர்சாதனப்பெட்டிமின் னடுப்பு, மின் அழுத்தப் பெட்டி போன்ற ஆடம்பர தேவைகளுக்கு மின்சாரத்தைப்பாவிக்காது தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது

பல்கலைக்கழக மாணவர்கள்

## கல்வியை இடைநிறுத்தி பின் மீண்டும் தொடர அனுமதி!

கொழும்பு ஏப் 29

பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் உள்வாரி, வெளிவாரி மாணவர்கள் விசேட காரணங்களுக்காக தமது கல்வியை சில காலத்துக்கு இடை நிறுத்தி வைத்துவிட்டுப் பின்னர் தொடர விரும்பினால் அதற்கு அனுமதி வழங்கப்படும்.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிஹார உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இந்தத் தகவலை தெரிவித்தார்.

இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் மிக விரைவில் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

மாணவர்கள் தமது கல்வியை இடை நிறுத்தி பின்னர் தொடருவதாயின் அதற்கு ஏற்கக் கூடிய நியாயமான காரணங்களைக் காட்ட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

(உ-2)

## ஜீ. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை; விண்ணப்ப முடிவு திகதி மே 14

கொழும்பு, ஏப்ரல் 29

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. உயர்தரப்பத்திரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசித்திகதி மே 14 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப இறுதித் திகதி மேலும் நீடிக்கப்பட மாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

இதுவரை 35 ஆயிரத்துக்கு அதிகமான தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

(உ-எ)


எமது புதிய வெளியீடுகள்:

★ லட்சுமி ★ அனில்கபூர் நடித்த
மணிரத்தினத்தின்
ப்ரியா ஓ ப்ரியா (ஒறிஜினல்)

★ ரஜனி ★ ஸ்ரீதேவி நடித்த
அக்கினிக் கரங்கள்
( ஒறிஜினல் )

117 மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிகாண் புள்ளிகளை

## மாவட்ட ரீதியில் மதிப்பிடுவதை ரத்துச் செய்யுமாறு ஆலோசனை!

### திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 29

பல்கலைக் கழகத் தெரிவுக்குரிய தகுதி நிலைப் புள்ளிகளை மாவட்ட ரீதியில் நிர்ணயம் செய்யும் முறை எதிர்காலத்தில் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

இந்த ஆலோசனையை நான் உயர் அதிகாரிகளிடம் முன் வைத்திருக்கிறேன்.

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்த விஜேசேகர இவ்வாறு கூறினார்.

நேற்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்ற மூன்றாம் நிலைக் கல்வி பற்றிய கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்

திறந்த பல்கலைக்கழகம் பற்றிக் குறிப்பிடுகையில் பேராசிரியர் விஜேசேகர கூறியதாவது:–

''திறந்த பல்கலைக் கழகம் திறந்த பிரவேசம் உடையது. 18 வயதுக்கு மேற்பட்ட — எழுத, வாசிக்கத் தெரிந்த— எவரும் திறந்த பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்துப் பட்டம் பெறலாம். திறந்த பல்கலைக் கழகம் முழு நாட்டுக்கும் பொதுவானது.

திறந்த பல்கலைக்கழக மாணவர்களில் இரு சத வீத மானவர்களே யாழ்ப்பாணத்தவர்களாக இருப்பது கவலைக்குரியது. யாழ்ப்பாணத்தவர்களும் இந்த வசதியை நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதே எனது விருப்பம்'' என்றும் அவர் கூறினார்.

இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழககல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் வீ. ஆறுமுகம், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் எஸ். ராஜேந்திரா, யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கழகத்தின் பதில் பணிப்பாளர் எஸ். ஏ. பி. துரைரத்தினம், திறந்தபல்கலைக்கழகத்தின்யாழ்.பிராந்தியத் தலைமைக் காரியாலயத்தின் துணைப் பணிப்பாளர் கே. கருணாகரன், யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்வி அதிகாரி எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகம் பற்றிய வீடியோப்படம் ஒன்றும் காட்டப்பட்டது (அ-க)

## முல்லைத்தீவில் வியாழனன்று செல்லப்பாவின் தேனிசை!

முல்லைத்தீவு ஏப் 29

தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சி முல்லைத்தீவு நகரிலும் இடம் பெற உள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை முல்லைத்தீவு திறந்தவெளி அரங்கில் மாலை 6 மணிக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவு இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது. (ஒ-92)

## அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 29

நேற்று நுணாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பலியானவர் நாவற்குழியைச் சேர்ந்த செல்வி சிவலிங்கம் சிவதர்ஷினி (வயது 16) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதே விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டுவிலைச் சேர்ந்த கணவன் மனைவியான கணேசலிங்கம் (வயது 35), கலாவதி (வயது 33) ஆகியோராவர். (அ-9)

## நெடுந்தீவு விவசாயிகளுக்கு ரூபா 4,000

நெடுந்தீவு, ஏப். 29

நெடுந்தீவைச் சேர்ந்த சுமார் 350 விவசாயிகளுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை சுயதொழில் முயற்சி நிவாரணப் பணம் ரூபா 4ஆயிரம் வழங்கப்பட இருக்கிறது.

யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கியில் இக்கொடுப்பனவு வழங்கப்படும். [ஒ-111]

## முதலாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 29

யாழ். வளன்புரம் ஐக்கிய சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு விழா நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெற இருக்கின்றன.

திரு. பிப் நீக்கிலஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு.வே.பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஓ)

## வடக்கு - கிழக்கு மாகாணம் அரசின் பிடியிலிருந்து விலகிச் செல்கிறது

### நாடாளுமன்றத்தில் அஷ்ரப்

கொழும்பு, ஏப். 29

வடக்கு–கிழக்கு மாகாணம் அரசின் பிடியிலிருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். என். அஷ்ரப் மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:–

வடக்கு – கிழக்கில் சட்டம் ஒழுங்கு நிலை பெரும் கவலையை ஏற்படுத்துகிறது. அங்கு சாதாரண மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. பொலீஸ் நிலையங்கள் இல்லை.

ரஞ்சன்: விடுதலைப் புலிகள் மீது தான் நீங்களும் பழி சுமத்துகிறீர்கள்.

அஷ்ரப்: நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதே நீதிமன்றத்தில் அவர்களால் தீர்ப்பு வழங்கப் படுகிறது. நான் அங்கு போவதில்லை என்று என்னை அமைச்சர் கூறுவது சிறுபிள்ளைத்தனமானது. நீங்கள் தீக்கோழிபோலதலையை மறைத்து ஒன்றும் தெரியாததுமாதிரி இருக்க முயல்கிறீர்கள்.

அமைச்சர் விடுதலைப் புலிகளை மக்கள் நேசிப்பதாக கூறுகிறார். உண்மையில் யார்யாரை நேசிக்கிறார்கள் என்று எமக்குத் தெரியும். அங்கு மக்களை பாதுகாக்க அரசு முன்வரவேண்டும்.

புகையிரதம் கூட அங்கு நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகிறது. சிலைகளும் சின்னங்களும் அங்கு நடப்படுகின்றன. அரசு மௌனமாக இருக்கிறது. நீதிபதியின் தீர்ப்புகளுக்கு எதிராக அவர்கள் மீண்டும் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள்.

ரஞ்சன்: அவர்களை ஜனநாயக வழியில் கொண்டுவர முயல்கிறோம்.

அஷ்ரப்: உங்கள் உணர்ச்சிகளை மதிக்கிறேன். ஜனநாயக வழிமுறைக்கு வர விரும்பும் அவர்களின் நடவடிக்கைகளால் எமக்கு அப்பகுதிகளுக்கு செல்ல முடிவதில்லை. எமக்கு பாதுகாப்பு இல்லை.

சபாநாயகர்; ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தமது தொகுதிகளுக்கு செல்ல சுதந்திரம் இருக்க வேண்டும். அவர்களுக்கு அதற்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் ஜனநாயகம் உயிர் வாழ முடியாது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உறுப்பினர்கள் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். ஆனால் என்னால் எதுவும் செய்ய முடிய. துள்ளது.

அஸ்வர் (குறுக்கீடு): வடக்கு கிழக்கில் நிலை சுமுகமாக இருக்கிறது.

ரஞ்சன்: உறுப்பினர்கள் செய்யும் தவறுகளால் அவர்கள் அங்கு செல்ல முடியாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்.

சபாநாயகர்: சகல உறுப்பினர்களும் தொகுதிகளுக்கு செல்ல பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும். அது எந்த கட்சியாக இருந்தாலும் மிக அவசியம்.

(இ-2)

## 10 கோடி புசல் நெல்லை உற்பத்தி செய்ய இலக்கு

கொழும்பு, ஏப் 29

1990 91 பெரும்போகத்தில் 10 கோடி புசல் நெல்லை உற்பத்தி செய்ய விவசாய அபிவிருத்தி அமைச்சு இலக்கு குறித்துள்ளது.

புதிய நெல் இனங்களை அறிமுகம் செய்து வைக்கவும் விவசாய அமைச்சு திட்டமிட்டு உள்ளது. (ஒ-எ)

## குழந்தையின் நலனை பாதிக்கும் விதத்தில் சுவீகாரம் செய்யத் தடை!

கொழும்பு, ஏப் 29

வெளிநாட்டார் இலங்கைக் குழந்தைகளை உத்தியோக பூர்வமற்ற முறையில் சுவீகரிப்பதை தடுக்கும்ஜனாதிபதியின் உத்தரவு அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சுவீகரிக்கப்படும் குழந்தையின் நலன் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களஆணையாளர் ஆலோசனை கூறும் பட்சத்தில் அதையும் மீறி அந்த சுவீகரிப்பு மனுவை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுவதை ஜனாதிபதியின் உத்தரவு தடுக்கிறது.

அப்படியான விண்ணப்பங்களை நீதிமன்றங்கள் நிராகரிக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் உத்தரவு வலியுறுத்துகிறது. (அ-எ)

## 3 பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை!

மூன்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் மீது விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி விசேட புலனாய்வுப் பிரிவை பொலீஸ் மா அதிபர் பணித்திருக்கிறார்.

இம்மூவரில் இருவர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் ... அனாமதேய முறைப்பாடு ... இந்த உத்தரவுபிறப்பிக்கப்பட்டது.

கப்பம் கேட்டது, பல்வேறு நோக்கங்களுக்காக சேகரிக்கப்பட்ட பணத்துக்கு கணக்குக் காட்டாமை, தீவிரவாத சந்தேகநபர்களை ஒழுங்குமுறையின்றி விடுவித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டு இருந்தன. (உ-எ)

## திருநெறிய தெய்வீக மாநாடு இன்று காலை ஆரம்பம்

### தேவார மனனப் போட்டியாளருக்கும் பரிசு

யாழ்ப்பாணம், ஏப் 29

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் பதினொரு நாள் திருநெறிய தெய்வீக மாநாடு இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பமாகிறது.

நல்லூர் சிவன் கோவிலில் இன்றுகாலை 9மணிக்கு நடைபெறும் திருமுறைப்பால் உற்சவத்துடன் மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள் தொடக்கிவைக்கப்படும்.

ஆதீன மண்டபத்தில் விழா இன்று காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகும். இன்றைய நிகழ்ச்சிகளுக்குயாழ்ப்பாணம் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமை வகிப்பார்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் ஆசியுரை வழங்குவார்.

தலைமையுரையைத் தொடர்ந்து வித்துவான் வசந்தா வைத்தியநாதன் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி ஆகியோர் இன்றைய விரிவுரைகளை நிகழ்த்துவர்.

அவற்றைத் தொடர்ந்து, ஷப்றா நிதி நிறுவனத்தின் ஆதரவுடன் நல்லை ஆதீனம் நடத்திய தேவார மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். திருமதி யசோதை சரவணபவன் பரிசில்களை வழங்குவார்.

அதன் பின்னர் மகேசுர பூசையைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு புராண படனமும், 4 மணிக்கு ஆதீன ஓதுவார் மூர்த்தி சி. தில்லைமணியின் பண்ணிசையும் இடம்பெறும்.

நாளை முப்பதாம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை கந்தபுராண படனமும், விசேட இயல் இசை, நாடகம், கதாகாலேட்சபம், பண்ணிசை நிகழ்சிகளும் தினமும் பிற்பகலில் இடம்பெறும்.(அ)

## உ. அ. அதிபர் பணிமனை திறப்புவிழா

வண்ணார்பண்ணை ஏப் 29

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான புதிய கட்டடம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குத் திறந்து வைக்கப் படும்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்துவைப்பார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தரக் கட்டடத்தில் இப் பணிமனை இயங்கும். (அ-ரி)

## அரிசி ஆலைகளை விற்க முடிவு!

கொழும்பு, ஏப்ரல் 29

நெல் சந்தைப்படுத்தும் சபை நாட்டில் உள்ள தனது 29 அரிசி ஆலைகளில் 26 அரிசி ஆலைகளைவிற்றுவிடப் போகிறது.

மூன்று அரிசி ஆலைகளை மட்டுமே நெல்சந்தைப் படுத்தும் சபை இனி வைத்திருக்கும் என்று விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித் துறை அமைச்சர் தர்மதாஸா பண்டா தெரிவித்தார்.

(உ-எ)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 29

றமழான்பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் சாபி நகர் ஜின்னா சன சமூகநிலையமும், புதிய சோனகதெரு சனசமூக நிலையமும் இணைந்துசினேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டி ஒன்றை நடத்துகின்றன.

இப் போட்டியில் நவாந்துறைசென்மேரிஸ்விளையாட்டுக் கழகமும், புதியசோனக றோசன் விளையாட்டுக் கழகமும் மோதும்,

புதிய குடியிருப்பு மைதானத்தில் நிகழும் இப்போட்டி இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்:

[இ-மு]


## மரண அறிவித்தல்

### கணவதிப்பிள்ளை சிவகுரு

மானிப்பாய் கனகசபை றோட்டைச் சேர்ந்த கணவதிப்பிள்ளை சிவகுரு காலமாகிவிட்டார். அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், பூங்காவனம் காலஞ்சென்ற கைலேஸ்வரன், காலஞ்சென்ற மகேஸ்வரன், லோகேஸ்வரன் (Germany), பத்மாவதி, வாகீஸ்வரி (London) யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29. 4. 90 காலை 11 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ. சபாரட்ணம்

கனகசபை றோட்,
மானிப்பாய்.

(12394)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org